





# இராவண தரிசனம்







இலக்கிய
நாடகம்
புதிய நோக்கு

வீணைவேந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே.....

1. சமர்ப்பணம்.

2. வாழ்த்துரை - சுவாமி உமாஷங்கரானந்த
   சரஸ்வதி ஷி ஓம் ஷர்
   (மௌனாச்சிரமம்)
   கொழும்பு

3. அணிந்துரை - திரு. சுந்தரம் திவகலாலா BA (Hon) SLA
   வடகிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர்

4. ஒரு கண்ணோட்டம் - திரு. இரா. சின்னத்தம்பி
   இளைப்பாறிய பிரதிக்கல்விப்பணிப்பாளர்
   (தீவகம் நெடுந்தீவு)

5. அணிந்துரை - ஞானசிரோன்மணி பண்டிதர்
   ஆர். வடிவேல் அவர்கள்

6. நெடிது நின் புகழ்கை நிலமெலாம் பரவுக
   பிரசங்க பூசணம் சைவகதாவாரி
   சிவயோகச் செல்வன்
   த. சாம்பசிவம்

7. பத்திரிகையாளர் பாராட்டு - சி. குருநாதன்

8. என்னுரை - வீணைவேந்தன்

9. வெளியீட்டாளர் உரை - த. சித்தி அமரசிங்கம்

10. நாடகம் - இராவண தரிசனம்


11. கு. செந்திவேல் - வீணைவேந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நாடகத்தை மேடையேற்ற விரும்புவோர் இதன் ஆசிரியரிடம் இருந்து எழுத்து மூலம் அனுமதிபெற **வேண்டும்** சகல உரிமைகளும் **ஆசிரியருக்கே உரியது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



கு. செந்தில்வேல்

துளிர்த்தது
17-04-1932

உதிர்ந்தது
07-08-1985

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஷிவம்

# மௌனாச்சிரமம்

# வாழ்த்துரை

இறை ஆகமம் மேருமலையில் இருந்து திருநந்தி தேவர் ஊடாக (தெக்ஷணாமூர்த்தி) மலர்ந்தது. இதனை உண்மையாகப் பூமிக்கு உணர்ந்து கொணர்ந்தவர்கள் சூரபதுமரும் பதுமகோமளாவும் ஆவர்.

இம்முன்னோர்களை அடியொற்றியே இராவணேஸ்வரரும், வண்டோதரியாரும் **இறை ஆகமத்தை - திராவிடத்தை சைவத்தை - தமிழை** பூமி முழுவதும் நெறிப்படுத்தினார்கள்.

இராவணேஸ்வரரின் காலத்திலேயே (கி. மு. 12,000 ஆண்டுகள்) சிவலிங்க வணக்கமும், பூரணத்துவமான சைவ வாழ்வும், வழிபாடும் நிகழ்ந்தன.

**திருமூலவர்பெருமான்** இராவணேஸ்வரரை **"ஈஸ்வரர்"** ஆகவே அறிவிக்கின்றார். இராவணேஸ்வரருக்குப் பத்து நாமங்கள் (தசநாமி) உண்டு.

01. இராவணேஸ்வரர்
02. இலங்கேஸ்வரர்
03. ஈழநாதர்
04. திரிகூடபர்வதர்
05. சிவனொளிபாதர்
06. தக்ஷணேஸ்வரர்
07. தக்ஷணகைலாயர்
08 சாமவேதர்
09. சாமகானர்
10. வீணைக் கொடியர்

இராவணேஸ்வரர் சிறந்த மருத்துவர், சிறந்த வீணை இசை விற்பன்னர், சிறந்த அரசன். உயர்ந்த ஒரு தபசி. அற்புதமான வான் ஊர்திகள் வைத்திருந்தார். சதுரங்கம் (Chess) விளையாட்டை முதன்முதலாகக் கண்டு பிடித்து உலகுக்கு அறிவித்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறை பெருமை நிறைந்த இராவணேஸ்வரரை நாம் அனைவரும் உணர்ந்து போற்றுதல் வேண்டும். இராவணேஸ் வரருக்கு கதிர்காமத்திலே கிரிவிகாரையின் பிற்பக்கமாக அற்புதமான கோயில் ஒன்று உண்டு. கல்லாலவிருட்சத்தின் கீழ் அக்கோயில் அமைந்திருப்பதையிட்டு நாம் அனைவரும் ஆனந்தம் அடைதல் வேண்டும்.

இராவணேஸ்வரர் கட்டிய இராவணதடாகம் (நீளம்-56 km, அகலம் -45km) கைலாயமலையின் தென்பகுதி யில் உள்ளது.

இந்த வகையில் **"இராவண தரிசனம்"** எனும் சிறந்த நூலை மக்களின் பார்வைக்கு - தெளிந்த உணர்வுக்கு சமர்ப்பித்துள்ளார் திரு. சித்தி. அமரசிங்கம்(வீணைவேந்தன்) அவர்கள். அவரின் அரிய முயற்சியை - அவரை நாம் அனை வரும் ஒன்று சேர்ந்து வாழ்த்துவோம்.

அன்பு வணக்கம்

19, I. B. C. Road,
Colombo - 6
**12-01-1997**

அன்புள்ள
**சுவாமி உமாஷங்கரானந்த**
**சரஸ்வதி ஷிஓம்ஷர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

இராவண தரிசனம் - நாடகமாகப் பார்த்தேன் - கைப் பிரதியைப்படித்தேன். நாங்கள் அவனின் பரம்பரை

அவனை எவ்வளவு கேவலமாகக் காட்ட முடியுமோ அந்தளவிற்கு காட்டினர். எழுதினர். பேசிவருகின்றனர். எம்மவனைப்பற்றித் தூற்றியபோது மகிழ்ந்தவர்கள் நாம்.

இதில் வேறுபட்டு நிற்பவர் - நண்பன் அமரசிங்கம் - ஆக்கம் பலே!

நெறியாள்கை, நடிப்பு போற்றும் தரமிக்கதாக இருந்தது. அமரசிங்கத்தின் விடாய் இன்னும் தீர வில்லை. அவனுக்கு அகோரப்பசி. தீனி போட நாம் முன்வரவேண்டும். தீனி போட மறந்து, அல்லது தவறி செயற்படுவோமேயானால், நட்டம் எமக்கின்றி அவனுக்கில்லை. அந்த " துடிப்பான " கலைஞனின் கலைப்பசிக்குத் தீனி போட முன் வாருங்கள்.

இத்தரிசனம் மூலம், இராவணனை, அவனாகவே காட்டிய அமரசிங்கம் எமக்குத் " தரிசனம்" தந்துள்ளான். வாழ்க அவன் கலைத்தொண்டு. நல்ல கலைஞர் சிரஞ்சீவிகள்.

அன்பன்.

**சுந்தரம் டிவகலாலா BA (Hon) SLA**
செயலாளர்

கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத் துறை
அமைச்சு,
வட - கிழக்கு மாகாணம்,
திருக்கோணமலை.

**06-01-1997**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'இராவண தரிசனம்' நாடகம்
## ஒரு கண்ணோட்டம்

திருக்கோணமலைதந்த (வீனைவேந்தன்) கலாவிநோதன் த. சித்தி அமரசிங்கம் அவர்கள் பொதுவாக ஈழ நாட்டின் கலை கலாசார ஆக்கங்களுக்கும் குறிப்பாக திருக்கோண மலையின் கலை கலாசார எழுச்சிக்கும் உறுதுணையாக "அஸ்திவாரமாக" இருந்து அரும்பணியாற்றுவதை அவரை அறிந்தவர்களுக்கு நன்கு தெரியும்

மறைந்து போனநிலையில் உள்ள பல்வேறு, பழைய ஆக்கங்களை தேடிப்பிடித்து வெளிக்கொணரும் ஆர்வம் அவரில் செறிவாக இருப்பதை நான் கண்டேன். குறிப்பாக முத்தமிழும் ஒன்றுசேரும் நாடகக் கலையில் பல தசாப்தங்க ளாக திருக்கோணமலை மாவட்டத்தில் தமது முத்திரையைப் பதித்து பலரின் பாராட்டுதலையும் பெற்றுள்ளார். குறிப்பாக இவர் இளம் சிறார்கள் மத்தியிலும் நாடகக் கலையைச் செறிவுறச் செய்ய, நாடக மன்றங்களில் அவர்களை ஈடுபடச் செய்வதோடு, பாடசாலைகளிலும் தமது உதவியை நல்கி அவர்கள் மத்தியில் இக்கலையை வளர்ப்பதை பாராட்டாதி ருக்க முடியாது.

இனி நாடகத்திற்கு வருவோம் - சிவபக்தனான இரா வணனுக்கு பல்வேறு சிறப்பம்சங்களை இராமாயணத்தில் காட்டியபோதும், சீதையைச் சிறைவைத்த செயற்பாடு அவ ரின் புகழுக்கு மாசு ஏற்படுத்தியதாகவே நாம் காண்கின்றோம்.

திராவிடச் சக்கரவர்த்தி ஒருவரை மாசுபடுத்திய காப் பியமே இந்த இராமாயணம் என்றும், இது தீயிடப்பட வேண் டிய தொன்று எனவும், ஆயிரத்து தொளாயிரத்து நாற்பது களில் திராவிட இயக்க அறிஞர்கள் அறை கூவ, அதற்காக இளைஞர்கள் அணிதிரண்டதும் நாம் அறிந்ததே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட நாட்டுக் காப்பியங்களான மகாபாரதம், இராமாயணம் பல சிறந்த ஆழ்ந்த கருத்துக்களையும் தத்துவங்களையும் கொண்டவையாக இருப்பினும்;காப்பியத்தின் கதை அமைப் பில், தமது கதாநாயகர்கள் மேம்பாடடைய அவர்களின் எதிரி களின் பால் "சூழ்ச்சிகள்" செய்துள்ளதையும், அதை இறை அவதாரமான "கண்ணன்" இராமர் செய்ததையும் காணக் கூடியதாக உள்ளது. இது "தர்மம் வெல்லும்" என்னும் தத்து வத்திற்காக அமைந்திருப்பினும், இராமாயணத்தைப் பொறுத் தமட்டில் தென்னாட்டவரை மனம் நோகச் செய்யும் கருத் தாகும் என்று அன்று திராவிடத்தலைவர்கள் முழங்கினார்கள்.

"**இராவண தரிசனம்**" எனப்படும் இந்நாடகத்தில் இராவணன் உடன் பிறப்புக்களின் சதியால் வீழ்ச்சியடைந் தானே தவிர, ஜானகியை சிறைவைத்ததினால் அல்ல, என்ற புதிய சிந்தனையை ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.

இராமாயண யுத்தத்தின் இறுதி நாளுக்கு முதல் நாள் தனது அன்புக்குரிய மனைவி மண்டோதரிக்கு விளக்குவதி னால், தான் மாற்றான் மனைவியை விரும்பிய காமுகன் அல்லவென்ற கருத்தை, பண்புடைய மனத்தினளான மண்டோதரிக்கு விளக்கியதாகக் காட்டிய பாங்கு நன்றாக அமைந்துள்ளது.

இராமாயண காப்பியத்திற்கு புதிய கருத்தாக முன்வைக் கப்பட்ட இக்கருத்து, வழக்காடு மன்றத்திற்கு எடுத்துக் கொள்ளப்படக் கூடிய ஒன்று என்பது எனது கருத்து. இக் கருத்தை முன்வைத்துள்ள இந் நாடகம் மக்கள் மத்தியில் வரவேற்பைப்பெறும் என நம்புகின்றேன்.

வளர்க இவர் பணி!

**இரா. சின்னத்தம்பி**
இளைப்பாறிய பிரதி கல்விப்பணிப்பாளர்
தீவகம் - நெடுந்தீவு.

02-10-1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

ஞான சிரோன்மணி
**பண்டிதர். ஆர். வடிவேல் அவர்கள்**

ஆலய தரிசனம், கோபுர தரிசனம், ஸ்தல தரிசனம், மூர்த்தி தரிசனம், குரு தரிசனம், முதலிய தரிசனங்களுக்கு மரபு வழியான சில விதிமுறைகள் இருக்கின்றன. இவற்றைத் தூல தரிசனமாகக் காண்பதற்கு மரபு விதிகள் துணை புரிகின்றன. சூக்கும தரிசனமாகக் காண்பதற்கு ஆழ்ந்த சிந்தனைத் தெளிவு வேண்டப்படுகின்றது.

புராண வரலாற்று நாயகர்களில் ஒருவன் சூரன், ஆயிரத்தெட்டு அண்டங்களையும் கட்டியாண்டவன் என்பது கந்த புராணச் செய்தி. முருகப் பெருமானோடு அவன் மலைந்த போர்க்களத்திலே, முருகன் அவனுக்கு விஸ்வரூப தரிசனம் காட்டுகின்றார். அந்தத் தரிசனத்தை அவன் தூல தரிசனமாகக் காண்கின்றான். மாயவலிபடைத்த சூரனை மானாபிமானம் தடுக்கின்றது. இதனால் சூக்கும தரிசனம் கிடைக்கவில்லை. "தடுத்தது மானமொன்றே" என்பது கந்தபுராணக் கூற்று.

இதிகாச வரலாற்று நாயகர்களில் ஒருவன் இராவணன். மகா தவத்தைச் செய்து இறைவனிடமிருந்து முக்கோடி வாழ்நாளும், வீரவாளும் பெற்றவன். சிவபக்தன். கைலை எடுத்த வீரத் தோள்களை உடையவன். ஆன்றவிந்தடங்கிய அறிஞன். குடிகளைக் குறைவின்றிக் காத்துத் தன் குலங் காத்த கர்மவீரன். வீணைக்கொடியேந்திய வித்தகன். இவனுடைய பெருமைகளையெல்லாம் இந்திரசித்து என்ற கதா பாத்திரத்தின் வாய்வழியாக இந்த நாடக நூலாசிரியர் கலாவினோதன் - கலை விருத்தன் த. சித்தி அமரசிங்கம் (வீணைவேந்தன்) அவர்கள் மேடையேற்றுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணனுடைய தூல தரிசனத்தை இந்திரசித்து, மண்டோதரி என்ற கதாபாத்திரங்கள் மூலம் காட்டி, புதிய பார்வையினாலே புரட்சிகரமான நுண்ணிய பார்வையினாலே இராவண தத்துவத்தை சூக்கும தரிசனமாகக் காட்டுகின்றார் நூலாசிரியர். சிந்திக்க வைக்கும் புதிய பார்வையில் **இராவண தரிசனம்** பளிச்சிடுகின்றது.

முதல்நாட் போரில் "இன்று போய் நாளை வா" என்று இராமன் கூறியதையும் - இந்திரசித்துவின் அழிவையும் - சூர்ப்பனகையின் சூழ்ச்சியையும் - விபீஷணனின் பதவி மோகத்தையும் - ஒரு பெண்ணால் தனக்கு மரணம் ஏற்படும் என்ற விதியையும் - வெள்ளை உள்ளம்படைத்த மண்டோதரியின் மனநிலையையும் அமைதியாக ஆழ்ந்து சிந்திக்கின்ற இராவணன், இரண்டாம் நாள் போருக்குப் புறப்படுமுன் மண்டோதரிக்குத் தனது சூக்கும தரிசனத்தைக் காட்டுகின்றான் என்பதை நூலாசிரியர் புதிய பார்வையில் நாடகமாக்கித் தருகின்றார்.

"இதுவரை என் உள்ளக் கருவறையில் வைத்திருந்த, யாருக்கும் தெரியாத சில விஷயங்களை உனக்கு நான் வெளிச்சம் போட்டுக் காட்டப் போகின்றேன்" என்று இராவணன் மண்டோதரிக்குக் கூறத் தொடங்கும் சம்பவங்கள் நூலாசிரியரின் புதிய பார்வையில் பிறந்த **இராவண தரிசனம்.**

"**இராவண தரிசனம்**" என்ற நாடக நூலின் முடிவில், இராமாயணத்தில் பலராலும் எடுத்தாளப்படும் பாடலொன்றைக் காட்டி, அதிலும் புதிய பார்வை ஒன்றைத் தொலை நோக்கி மூலம் செலுத்தியிருக்கிறார் நூலாசிரியர். "வெள்ளெருக்கம் சடைமுடியான்" என்ற பாடலில்; இராமனுடைய வாளி இராவணனுடைய உடலுள் உயிரைத் தேடியது போல, சானகியை மனச் சிறையில் கவர்ந்த காதல் உள்ளிருக்குமென நினைத்து உடல் புகுந்து தடவிய வாளி அக்காதலை அங்கு காணாமல் வெளியேறியதாகக் கூறும் கலாவினோதன். கலைவிருதன். த. சித்தி அமரசிங்கம் (வீணைவேந்தன்) அவர்கள் இராவண தரிசனத்தின் மூலம் இராவணனைக் குற்றவாளிக் கூண்டிலிருந்து விடுதலை செய்திருக்கிறார். வாழ்க நூலாசிரியரின் நுண்மாண் நுழைபுலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுத்துநின் புகழ்கை

# நில மெலாம் பரவுக.

எடுத்தவன் தருக்கை
இழித்தவன் அருளால்
எடுத்தநின் கருவை
அழகுற வடித்தாய்
தொடுத்தவுன் பருக்கை
நிழ லுறப் படைத்தாய்
நெடுத்துநின் புகழ்கை
நில மெலாம் பரவுக.

பதங்களில் வேகம்
பாத்திர வேகம்
இத முறு தாகம்
ஈந்தனை அண்ணா
விதமுறு விலாச
விற்பனம் கண்டேன்
புதனுறு புலமை
நற்தனம் பெற்றேன்.

பிரசங்க பூஷணம், சைவகதாவாரி
சிவயோகச் செல்வன்

25-03-1995 த. சாம்பசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகையாளர் பாராட்டு

சிந்தனையைத் தூண்டும்
"**இராவண தரிசனம்**" நாடகம்
இராமாயணத்துக்கு புதிய பரிமாணம்
ஒன்றைக் கொடுத்துள்ளது.

சீதையைச் சிறைப் பிடித்தான்
இராவணன். அவளைத் திருமணஞ்
செய்ய முயற்சித்தான். அதனால்
இடம்பெற்றதே இராம - இராவண
யுத்தம் என்பது நாமறிந்த விஷயமாகும்.

"**இராவண தரிசனம்**" நாடகம்
வேறொரு கோணத்தில் இராமாயணத்துக்கு
அர்த்தம் கொடுக்கின்றது.

இறுதி நாள் யுத்தத்திற்கு புறப்படுவதற்கு
முன்பு இராவணன் தனது
மனைவி மண்டோதரிக்கு தனது
உண்மை நிலையை வெளிப்படுத்துவதாக
அமைந்துள்ளது, இந்த நாடகம்.

வீண் பழிக்கு இராவணன் இலக்கானான்
என்பது இந்த நாடகத்தின் உட்கருத்து.

புதிய கோணத்தில்
இராமாயணத்தை அணுகி
விறுவிறுப்பான முறையில்
அதனை நாடகமாக்கிய
கலாவினோதன் த. அமரசிங்கம் (வீணைவேந்தன்)
அனைவரின் பாராட்டுக்குரியவராகின்றார்.

70, பிரதான வீதி,
திருக்கோணமலை
**05-11-1996**

**சி. குருநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை கலைவாணி நாடக மன்றம்

## வாழ்த்துகிறது

வீணைக் கொடி வேந்தன் இராவணன் ஓர் அரக்கன்
காமக் குணம் நிறைந்தோன் அல்லன், அவன் உயர்ந்தோன்
தானைத் தலைவன் வீரன் கொள்கை குணக் குன்றன்; புதிய
கோணத்திலிருந்தமரன் தந்த நாடக நூல்சிந்தைக்கு நல்விருந்து.

தனக்கென ஒரு பாணி தனக்கென ஒரு பாதை
கலைக்கெனத் தன் வாழ்வைத் தந்தவன் அமரசிங்கம்
தலைக்கனமேயில்லான் தன்னலம் சிறிது மில்லான்
உலைக்களத்தில்புடமிட்டு உரைத்தெடுத்த முழுக்கலைஞன்.

நாற்பதாண்டு காலகட்டகலைவாணி மன்றத்தின் பிதாமகர் இளமை தொட்டு
நாடக பாத்திரத்துக் குயிர்கொடுத்துப் பார்ப்போரை கவர்ந் திழுக்கும் நடிப்பரசன்
நாடகத்தில் நவீன உத்தி கையாண்டு வெற்றி கண்ட சிறந்த நெறியாளன்
மேடையில் பொருத்தமான காட்சியைக் காட்டும் நுட்ப அரங்க அமைப்பாளன்.

கலைஞர்களைக் கௌரவித்தான் பொன்னுடையும் பொற்கிழியும் வாழ்த்து மடலும் வழங்கி;
நூல் வடிவில் கொண்டு வந்தான் கையெழுத்தில் முடங்கிய நம் எழுத்தாளர் படைப்புகளை;
**இராவண தரிசனம்** இவனின் அச்சில் வரும் முதற் படைப்பு; ஏறுநடைத் தமிழ்த் தொகுப்பு;
சீரிய பணிதொடர மன்றமதன் சார்பாக வாழ்த்துகிறோம் வாழ்க!

**எஸ். தவராசா**
தலைவர்

**30-01-"97**

**எஸ். ஜோசப்**
செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

"இராவண தரிசனம்"

இது எனது நீண்ட கால மன உளைச்சலுள் கிடந்து அவிந்து பொங்கிப் புழுங்கிப்பீறிட்டு வெடித்து வெளிவந்த பிரசவம்.

இராமாயணத்தை நான் சிறுவனாக இருந்தபோது வாசித்திருக்கிறேன். பத்துப் பன்னிரண்டு வயதில் எனது பாடசாலை விடுமுறைநாட்களில் கும்பிறுபிட்டியில் உள்ள மாமனார் செல்வமாணிக்கம் வீட்டிற்குச் சென்றுவிடுவேன். அங்கு என் வயதை ஒத்த மச்சானோடு சோழம் சேனைக்கு காவலுக்குச் செல்வேன். அப்படிச் செல்லும்போது மாமனாரின் ஸ்ரீமத் கம்பராமாயணவசன நூலை எடுத்துச்செல்வேன். அதில் நிறையப் படங்கள் வரையப்பட்டிருந்தன. அந்நூலை நேரம் கிடைக்கும் போதெல்லாம் வாசிப்பேன். எப்போ நான் கும்பிறு பிட்டிக்குச் சென்றாலும் நான் அந்த புத்தகத்தை வாசிக்க தவறியதில்லை, காரணம். அங்கு இருந்தது இந்த ஒரு நூல் மட்டுமே.

அப்போதெல்லாம் நான் இராவணனைப் பற்றி அதிகமாகக் கருத்தில்கொள்ளவில்லை.

S. S. C. வகுப்பில் கம்பராமாயணத்தை பாடமாகக் கொண்ட போதும் கூட,இராவணனைப் பற்றி பெரிதாக ஒன்றும் நான் கருதவில்லை. இராமர், சீதை, இலக்குவன், கைகேசி, கூனி இப்படி இவர்களைப் பற்றியே அறியக்கிடந்ததேயன்றி இராவணனைப் பற்றி அதிகம் அறிவிக்கப்படவில்லை. இராவணனை நாம் அதிகம் அறிந்தது சீதையை தூக்கிச் சென்றான் என்றும் அவளை அடைய முயற்சித்தான் என்பதும் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இராவணனை என் மனதில் உறுத்தி அவனைப் பற்றி சிந்திக்கவைத்தது "யாழ்" என்ற சிறுவர்கையெழுத்துப் பத்திரிகையை ஆரம்பித்தபோதுதான். ஆம்

1954ம் ஆண்டுகையெழுத்துப் பத்திரிகை ஆரம்பிக்க நினைத்த போது என்ன பெயர் வைக்கலாம் என்று எண்ணிய போது "யாழ்" என்ற பெயரைத் தேர்ந்தெடுத்தேன். அதன் ஆசிரியராக வீணைவேந்தனை தேர்ந்தெடுத்தேன். இந்த இரண்டு பெயர்களுமே இராவணனோடு சம்பந்தப்பட்டதாக இருக்கவேண்டுமென்று விரும்பினேன். காரணம் இலங்கா புரியை ஆண்டவன் இராவணேஸ்வரன் என்பது மட்டுமன்றி இராவணனுக்கும் திருக்கோணமலைக்கும் நெருங்கிய உறவு இருப்பதை இன்றும் கோணேசர் ஆலயத்தில் இருக்கும் இராவணன் வெட்டும், கன்னியாவில் இருக்கும் மாறு பட்ட வெப்பநிலை கொண்ட ஏழு வெந்நீர்க்கிணறுகளும் பறை சாற்றுகின்றன.

"யாழ்" கையெழுத்துப் பத்திரிகையின் வளர்ச்சி இரா வணனின் உணர்வை என் உள்ளத்தில் வளர்த்துக்கொண்டே வந்தது.

இராவணன் உண்மையில் சீதையில் மையல்கொண்டு தான் அவளைக் கவர்ந்தானா? அவளை அடையவேண்டு மென்ற வெறி இருந்தால் அந்த அடர்ந்த காட்டில் ஒரு இடமும் கிடைக்கவில்லை? அதற்காக அவளை கவர்ந்து வந்து பல வருடங்கள் காவல் காக்க வேண்டுமா?

இந்தக் கேள்வி அடிக்கடி என் உள்ளத்தில் எழுந்த எழுந்து மறைந்தது. இராவணன் சீதையில் மையல்கொண்டு கவர்ந்திருக்க முடியாது. இதற்கு வேறுகாரணம் இருக்க வேண்டும் என்ற எண்ணம் வலுப்பெற்றது. இன்னும் பல கேள்விகள் என் மனதில் தோன்றி மனதில் பெரும் உழைச் சலை உண்டாக்கியது. இந்த மன உழைச்சலுக்குள் இருந்து சில தெளிவுகள் ஏற்பட்டபோது அதை வைத்து ஓரங்க நாடகமாக ஆக்கவேண்டும் என்று ஆசைப்பட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று எனக்கு என் எழுதில் அவ்வளவு நம்பிக்கையில்லை."யாழ்"சிறுவர் கைப்பத்திரிகையில் பலரை எழுத்துத் துறையில் அவர்கள் வளர ஊக்குவித்தேன். ஆனால் என்னை வளர்க்க அதை நான் பயன்படுத்தவில்லை. எனவே என் எண்ணத்தை யார்மூலமாகிலும் வெளிக்கொணர அவாவினேன்.

நான் இந்தியாவில் கல்வி கற்ற வேளை என் நண்பனான மட்டக்களப்புக் கவிஞனும் அங்கு கல்விகற்றுக்கொண்டிருந்தார். அவரிடம் என் கருத்தைக் கூறி ஓரங்கக்கவிதை நாடகத்தை எழுதித்தரும்படி கேட்டேன்.

படிப்பை முடித்துக்கொண்டு ஊர்திரும்பிய போதும் என் சிந்தையில் இருந்து எண்ணம் மாறவில்லை.

1968ல் மீண்டும் நான் தி/கலைவாணி நாடக மன்றத்தில் இணைந்து செயல்பட்டபோதும் இதே கருத்தை என் நண்பர்களிடம் கூறி நாடகமாக ஆக்கித்தரும்படி கேட்டேன்.

எங்கள் மன்றத்தில் நடித்த ம. சூசைநாயகம் என்னும் நண்பரிடம் இருந்து ஒரு புத்தகம் தபாலில் வந்தது. பிரித்துப் பார்த்தேன் "இலங்கை வேந்தன்" மன்னார் கலாலயா வெளியீடு 19-09-1975 ம. சூசைநாயகம்.

வாசித்தேன். தூக்கிவாரிப்போட்டது. அவரோடு கலந்துரையாடிய என் எண்ணக்கருவை அப்படியே கொட்டி எழுதியிருந்தார். உடனே நண்பனுக்கு கடிதம் வரைந்தேன். அவன் பெரியவன் என்பதை அடுத்த கிழமை "சுதந்திரனில்" தன் தவற்றிற்கு மன்னிப்புக் கேட்டு செய்தி வெளியிட்டதன் மூலம் நிரூபித்து விட்டான்.

என் கரு எழுத்து உருவில் வந்த போது எனக்கு திருப்தி அளிக்கவில்லை. மீண்டும் சிந்தனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுகிய கால அவகாச நேரத்தில் இராவணனைப் பூரணமாகக் காட்டவும் வேண்டும். அவனின் உள்ளக்கிடக் கையை வெளிக்கொணரவும் வேண்டும். கூற வேண்டியதை கூறத்தவறின் நான் எடுத்துக்கொண்ட இலட்சியம் அடிபட்டுப் போகுமே என்ற ஏக்கம். அதுமட்டுமன்றி என் உள்ளத்தைத் திருப்திப்படுத்தக் கூடிய சரியான ஆணித்தரமான- தெளிவான - விளக்கக்கூடிய - விளங்கக்கூடிய நாடக வடிவம் அமைய வில்லை. அத்தோடு எனக்குச் சாதகமான கம்பராமாயணத் தில் எங்காவது ஒரு பாடல் இருக்காதா என்ற தேடுதல் முடியாமை.

1981ல் விதிவசத்தால் நான் ஒரு சுதந்திரக்கைதியானேன். ஆம். ஒரு சில்லறை கடை முதலாளி ஆனேன். கிடைக்கும் ஓய்வு நேரமெல்லாம் இது பற்றித்தேடினேன். வானொலியில் கேட்கும் பேச்சுக்கள், பட்டிமன்றங்கள், வழக்காடு மன்றங் களில் எல்லாம் எனது கேள்விக்கு விடையைத் தேடினேன்.

இராவணனின் பிறப்பைக் கூறப்போந்த சுவாமி சித்ப வானந்தர்,

"நவீன வகுப்பு வாதத்தை இராமாயணத்தில் கொண்டு வந்து வலிந்து திணிப்பவர் இராவணனுடைய பிறப்பைத் தெரிந்து கொள்வது அவசியம். இவன் குலத்தில் யாருக்கும் கீழ்ப்பட்டவன் அல்லன்.குலத்தைப் பற்றி பெருமை பேசுகின்ற கூட்டத்தில் இராவணன் எப்போதும் முதன்மை வகிக்கக் கூடும். மேலான குலத்தினின்று உண்டாகின்ற பிரபாகங்க ளெல்லாம் இயல்பாக அவனுக்கு வந்து அமைந்திருந்தன" என்று அவரது இராவண தத்துவம் என்ற நூலில் விளக்கி யுள்ளார்.

தாங்கி இருபது தோளும் தடவரை
ஓங்க எடுத்தவன் ஒப்பில் பெருவலி
ஆங்கு தெரிந்து அமரா என்று அழைத்தபின்
நீங்கா அருள் செய்தாள் நின்மலன்தாளே.

(திருமூலர் - 350 செய்யுள் 179ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயக்குரவர்கள் இராவணனை தமது பாடல்களில் பல இடங்களில் பாடியுள்ளார்கள்.

இப்படிப்பட்ட சிவபக்தன் இராவணன் சீதையை காம வயப்பட்டு கவர்ந்திருப்பானா? ஏன் இந்தப் பழி?

சமய மோதல்கள் அன்றுதொட்டு இன்றுவரை தொடர்ந்து கொண்டே இருக்கும் ஒரு வியாதி.

சைவத்தை - சமணர் வெறுத்தனர். சமணத்தை சைவர் எதிர்த்தனர்.

சிவபக்தனான நாவுக்கரசர் சமணர்களுக்கு ஒரு துரோகி யாகவே காட்சி கொடுத்தார். இதனால் இவர் பட்ட இன்னல் கள் நாம் அறிந்ததே.

இதே போன்று சிவபக்தனான இராவணனை இராம பக்தர்களான வைணவர் வெறுப்பதில் ஆச்சரியமில்லை.

எனது தேடுதல் மேலும் தொடர்ந்தது. கம்பனின் இரண்டு பாடல்கள் என் கருத்துக்கு சாதகமாகக் கிடைத்தது. என்னுடைய தேடுதலுக்கு உற்சாகம் தந்தவர் எமது குடும்ப நண்பரான ஆசிரியை சில நூல்களைத் தந்து உதவியதன் மூலமாக.

கிடைத்த தகவல்களை மூளையுள் போட்டு ஒழுங்கு படுத்தினேன். அன்று இரவு 1.00 மணி சாமத்தில் நாடகம் பிரசவித்தது. ஆம்.

என் கண் அறுவைச் சிகிச்சை முடிந்து கண்டியால் வந்து படுத்திருக்கின்றேன். அன்று இரவு நித்திரை வரவில்லை மண்டைக்குள் நாடகக்கரு கிடந்து புரண்டு கொண்டே இருக்கின்றது. ஒரு மணிக்குப் படுக்கையை விட்டெழுந் தேன். மனைவி தன்னை மறந்து உறங்கிக்கொண்டு இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓசைபடாமல் வெளியே வந்தேன் பேப்பரையும் பேனாவையும் எடுத்தேன். எழுதினேன் எழுதினேன் 4½ மணிக்குப்போய் படுத்துவிட்டேன். அன்று எழுதியது கடைசிக்காட்சி. மூன்று நான்கு நாட்கள் கழித்து மன உளைச்சல். பேப்பர் பேனா வோடு அமர்ந்தேன் 1ம் காட்சி, 2ம் காட்சி, 3ம் காட்சி 4ம் காட்சி நாடகம் முடிவடைந்தது. வாசித்துப்பார்த்தேன் மனம் திருப்தி கொண்டது.

ஆனால் ஒன்று, முதல் நாள் இரவு எழுதிய கடைசி காட்சி இதில் சேர்க்கப்படவே இல்லை.

எழுதி முடிந்தது. இந்த இராவணனாக நான் நடிக்க வேண்டும் என்ற ஆசை எழவே சந்தர்ப்பம் சூழ்நிலையும் கை கொடுத்தது. நான் மேடையில் இராவணனாகத் தோன்றி னேன். நாடகத்தில் பங்கு கொண்டு உதவிய அனைவருக் கும் நன்றி.

இதே நாடகம் இன்று நூல் உருப்பெறுவது கண்டு மனம் இறைவனின் கருணையை எண்ணி நன்றிப்பெருக்கால் குழைகின்றது.

இந்நூலுக்கு நான் கேட்டுக்கொண்ட போது மனம் குன்றாது நல்ஆசி - அணிந்துரை - நல்கிய என் பெரும் மதிப்பிற்கும், அன்பிற்கும் உரிய கல்வி அமைச்சு பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் திரு. சுந்தரம் திவகலாலா அவர்கட்கும், நெடுந்தீவு இளைப் பாறிய கல்விப்பணிப்பாளர் திரு. சின்னத்தம்பி அவர்களுக் கும் என் உளம் கனிந்த நன்றியைத் தெரிவிப்பதில் அகமகிழ்வடைகிறேன்.

சிவயோகச் செல்வன் தம்பி சாம்பசிவம், நண்பனும் பத்திரிகையாளருமான சி. குருநாதன் ஆகியோருக்கும் என் நன்றிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை இலக்கியப் பணியில் எனக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கிவரும் திருக்கோணமலைக் கலைவாணி நாடக மன்றத்திற்கும் அதன் அங்கத்தவர்க்கும் - நல்வாழ்த்துத்தந்த தலைவர் S. தவராஜா, செயலாளர் S. ஜோசப் ஆசிரியர் தா. பி. சு. அவர்கட்கும் என் நன்றி.

இவற்றிற்கும் மேலாக கொழும்பில் வணக்கத்துக்குரிய சுவாமி உமாசங்கர் அவர்கள் இருந்தபோதும், கடிதத் தொடர்பு மூலம் நான் வேண்டியபோது தன் ஆசியை நல்கியமைக்கு என் இதயம் கனிந்த நன்றியைச் சிரம்தாழ்த்தி தெரிவிக்கின்றேன்.

இதன் அட்டையை அழகுற அமைத்து உதவிய அச்சகத்தார்க்கும், செல்வன். சு. செந்திற்குமரனுக்கும், கொழும்பில் எமக்கு இது சம்பந்தமாக உதவிய திருமதி. செல்வலிங்கம் குடும்பத்தினருக்கும் என் அன்பு கலந்த நன்றிகள்.

இந்நூலை அழகுற நூலாக்கித்தந்த ஸ்ரீ கணேச அச்சக தம்பதிகட்கும், அச்சக ஊழியர்கட்கும் என் இதய நன்றிகள்.

இந்நூலை உருவாக்குவதற்கு எழுத்து வேலைகள் அனைத்தையும் செய்து உதவிய தி. முத்தமிழ் வளர் கலை மன்றத்தினருக்கும் என் நன்றிகள்.

இவை அனைத்தையும் நான் செய்தேன் என்றால் என்னுள் இருக்கும் ஒரு பெரும் சக்தியின் உந்துதலே காரணம். அந்த சக்தியாக இருந்து என் வாழ்க்கையில் மட்டுமன்றி என் கலைஇலக்கிய வளர்ச்சியில் ஒவ்வொரு அசைவிலும் தன் வேலைப்பளுக்களுக்கு மத்தியிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டிருக்கும் என் மனைவிக்கு நான் எவ்வாறு நன்றி சொல்ல முடியும் என்று எனக்குத் தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றிற்கும் மேலாக என் கலை இலக்கிய வளர்ச்சியில் அக்கறையோடு என்னை ஊக்குவிக்கும் என் அன்பு கலைஞர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் நன்றி தெரிவிக்கும் அதே வேளை, என்னை இத்துறையில் சேவை ஆற்றப் பணித்த அந்த இறைவனுக்கும் என் இரு கரம் கூப்பி நன்றி கூறி வணங்கி விடை பெறுகின்றேன்.

நன்றி

வணக்கம்

21, ஔவையார் வீதி,
திருக்கோணமலை.

கலைவேந்தன்
01/02/97.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டாளர் உரை

"இராவண தரிசனம்"
இது எமது ஆறாவது வெளியீடு.

சிறுகதை - கவிதை - நாவல் போன்ற இலக்கியங்கள் வெளிவந்த அளவிற்கு நாடக இலக்கியங்கள் வெளிவரவில்லை. குறிப்பாகத் திருக்கோணமலையில் இருந்து வெளிவந்தது விரல்விட்டு எண்ணக்கூடிய அளவே. இதனால் இங்கு நாடக இலக்கியகர்த்தாக்கள் இல்லை என்பதல்ல. 1880ம் ஆண்டில் இருந்தே நம்மிடமும் நாடக இலக்கியகர்த்தாக்கள் இருக்கத்தான் செய்கின்றார்கள். நம் துர் அதிஸ்டம் நம் படைப்புக்கள் அச்சுவாகனம் ஏறுவதென்பது குதிரைக் கொம்பாக இருந்தது. இல்லையெனின் 1987ல் திரு. அகிலேசபிள்ளை அவர்களால் எழுதப்பட்ட நாடகம் இன்றுவரை வெளிவராமல் இருக்குமா?

1930இல் இன்னாசிமுத்து என்பவர் எழுதிய நாடகமே முதல்முதலில் திருக்கோணமலையில் மேடை ஏறியதோடு அச்சுப்பிரதியாக வெளிவந்த நூல் என்ற பெருமையோடு கூறியபோதும் அது இங்கிருந்து வெளிவந்ததாகத் தெரியவில்லை. ஆனால் திருக்கோணமலையில் இருந்து வெளிவந்த முதல் நாடக இலக்கியம் "இஸ்பெல் அல்லது ஈஸ்வரி" என்ற நாடகமே.

1925ம் ஆண்டில் திரு. வேலாயுதம்பிள்ளை அவர்கள் சேக்ஸ்பியரின் "மெஸர் போ மெஸர்" (Measure for Measure) என்ற நாடகத்தைத் தமிழில் "இஸபெல் அல்லது ஈஸ்வரி" என்ற பெயரில் கவிதை நாடகமாக்கதினார். இந் நாடக்தை வித்தியாலயம் வீதியில் இருந்த அவரது சொந்த அச்சகமான பரமேஸ்வரி பிரின்டிங் வேர்க்ஸ் என்ற அச்சகத்தினால் அவரே வெளியிட்டு அங்கேயே விற்பனைக்கும் விட்டிருந்தார். இந்நூல் இவரது தந்தையரான சரவணமுத்து விஸ்வநாதன் அவர்களின் ஞாபகார்த்தமாக வெளியிடப்பட்டது. இதன் விலை /25 சதம்.

இதை அடுத்து திருக்கோணமலையில் இருந்து வெளிவந்த நாடகங்கள்..........? கேள்விக்குறியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலையில் எத்தனையோ நாடக ஆசிரியர்கள் இருந்தபோதும், நாடக இலக்கியங்கள் நூல்களாக வெளிவந்ததாகத் தெரியவில்லை.

1989 - மார்கழி - 25ல் தாபி. சுப்பிரமணியத்தின் "கோயிலும் சுனையும்" என்ற நாடகத் தொகுதியை நாம் வெளியிட்டிருந்தோம்.

இதற்குப்பின் எமது நாடக இலக்கியகர்த்தாக்களான, ஆசிரியர் பாலசுகுமாரின் நாடகத்தொகுப்பான "பாலசுகுமார் நாடகங்கள்" என்ற நூலும், எனது நண்பர் பிரேமிளின் "நக்ஷ்ர வாஸி" என்ற நாடகம் 1993லும், நண்பர் கே. கே. மதிவதனனின் "காதலே நீ வாழி" என்ற நாடகம் 1994 டிசம்பரிலும் வெளிவந்தன.

ஆனால் இவைமுறையே மட்டக்களப்பு அனாமிகாவின் 1ம் வெளியீடாகவும், சென்னை த்ரிகோணேஷ் ப்ரசுரம் 1ம் வெளியீடாகவும், மட்டுநகர் உதயம், 14வது வெளியீடாகவும் வெளிவந்தன.

இதை அடுத்து 1995 வைகாசியில், திருக்கோணமலைக் கவிராயரின் "கயல்விழி" என்ற கவிதை நாடகத்தை வெளியிட்டோம்.

இன்று எமது ஆறாவது வெளியீடாக. எமது 3வது நாடக இலக்கியமான **"இராவண தரிசனம்"** என்ற நாடக இலக்கியத்தை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம். இந்த அளவிற்கு நாம் தொடர்ந்து நூல்களை வெளியிடுகின்றோம் என்றால் அது நீங்கள் தரும் ஆதரவினால்தான் என்பதை நாம் மறப்பதற்கில்லை.

இங்கு இன்னும் பல்துறைப்பட்ட நாடகக்கலைஞர்கள் இருக்கிறார்கள். அவர்களது படைப்புக்களையும் நூல் உருவில் வெளிக்கொண்டு வரவேண்டும் என்பதே எமது ஆசை.

எம் ஆசை நிறைவேற உங்கள் குன்றாத ஆசியும் குறையாத ஆதரவும் இருக்க வேண்டும் என்று கூறி விடை பெறுகின்றேன். - நன்றி

வணக்கம்

21, ஔவையார் வீதி,
திருக்கோணமலை.

**த. சித்தி அமரசிங்கம்**
**01 - 01 - 1997**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராவண தரிசனம்

சிவபக்தன் இராவணனின் சிந்தையிலே சிவனைத் தவிர வேறெதுவுமே இருந்ததில்லை.

சாமகானம் பாடிச் சங்கரனிடம் வாளும் பெற்ற இராவணனின் அழிவுக்கு, யார் காரணம்?

வாரணம் பொருத மார்பும், வரையினை எடுத்த தோளும் உடைய இராவணன் தரையில் வீழ, யார் காரணம்?

தாரணிமௌலி பத்தும் வீரமும்கொண்ட இராவணன் பாரில் பழிபட யார் காரணம்?

உடன் பிறப்பா? இல்லை உழவின் பிறப்பா?

முக்கோடி வாழ்நாளின் முடிவில்தான் சீதையைச் சிறை எடுத்தானா? இல்லைச் சீதையைச் சிறை எடுத்ததால் அவனது முக்கோடி வாழ்நாளும் முடிவடைந்ததா?

திரிகால ஞானியாம் இராவணனின் அழிவு அவன் அறிந்துதான் வந்ததா? இல்லை அவனை அறியாமலே வந்ததா?

திக்கெட்டும் கொடிகட்டிப் பறந்த இராவணன் வீழ்ச் சிக்கு யார் காரணம்? யார் காரணம்?? யார் காரணம்???

பாசமா....? நேசமா....? மோசமா...?

இதற்கு விடையே இந்தக் காவியம்

**"இராவண தரிசனம்"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி - 1

| இடம் | பாத்திரம் |
| --- | --- |
| **இராவணன் அரண்மனை** | **மண்டோதரி** |
| | **இந்திரசித்தன் (மேகநாதன்)** |

[மண்டோதரி போரை நினைந்து வேதனைப்பட்டவளாக இறைவனை நினைந்து வேண்டிக் கொண்டிருக்கின்றாள்]

**மண்டோதரி :** இறைவா! பரமேஸ்வரா! மூலமுதற் பொருளே!, முடிவில்லா தனிப் பொருளே! ஆதியே! சோதியே! அழிவில்லா ஐயனே மெய்யனே! எல்லை இல்லா இன்பத்தை அள்ளித்தரும் ஆனந்தக் கூத்தனே.அண்டங்கள் அனைத்தையும் படைத்தும், காத்தும், அழித்தும் அருள்பாலிக்கும் அப்பனே. எந்த வினைப் பயனால் இந்த வினை சூழ்ந்ததுவோ? முந்தை செய்வினையால் மூண்டதுவோ இத் தீ?

சொர்க்க புரியாய் இருந்த இப்பூமி இன்று - சோகபுரியாய் மாறி விட்டதே ஐயனே!

ஆவதும் பெண்ணாலே! அழிவதும் பெண்ணாலே என்பதற்கிணங்க, அனைத்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறதே.

இன்றைய போரிலும் யார் பிழைப்பாரோ? யார் மாள்வாரோ?

ஈசா! நீதான் எமைக்காக்கவேண்டும்.

[அப்போது போர் முனையில் இருந்து வாடிய முகத்தோடு களை இழந்தவனாக அங்கே வருகின்றான் மேகநாதன்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்திரசித்தன் :** (வேதனையோடு) அம்மா!

**மண்டோதரி :** (திடுக்கிட்டவளாக தன் மைந்தனைக் கண்டதும் ஆவல் மேலீட்டால் அவனைப் பார்த்து)

மைந்தா! மேகநாதா! உன் சிறிய தந்தை மீண்டாரா?

**இந்திரசித்தன் :** (நீண்ட பெருமூச்சொன்று விட்டவனாய் சோகம் தொண்டையை அடைக்க) ம்.......இல்லை அம்மா. அவர் மாண்டார்...

**மண்டோதரி :** (பதறியவளாக) என்ன........?

**இந்திரசித்தன் :** (அதே வேதனையோடு) ஆம் தாயே. அவர் வீர சொர்க்கம் சேர்ந்தார்.

**மண்டோதரி :** (அதிர்ச்சி அடைந்தவளாக வேதனை மிகுதியால்)
என்ன? அந்த மாமேரு மறைந்ததா? எங்கள் குலக்குன்று சரிந்ததா? இல்லை.. இல்லை... ஒருக்காலும் இல்லை......

இயமனையும் இந்திரனையும் வென்றவனாயிற்றே. சத்துருக்கனின் கொழுப்பைக் கரைத்தவனாயிற்றே. தேவதானவரின் கொட்டம் அடக்கியவனாயிற்றே. காலாகன் போரில் சத்துருக்களால் நெருங்க முடியாதவனாயிற்றே. எல்லையற்ற பலவானாயிற்றே.

ஐயா கும்பகர்ணா! உன் உடலில் பட்ட இந்திரனின் வச்சிராயுதம்தான் வலு விழந்ததேயன்றி, இழக்கவில்லையே வலுவை உன் உடல்.

வானவீதியில் நீ வலம்வந்தால் தேவர்களும் வானோரும் உனைக் கண்டு அஞ்சுவரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகதுக்கம் அனைத்திலும் உன் மூத்தோனோடு சரிபாதி ஏற்பாயே.

கும்பகர்ணா! பகைவர் கண்டஞ்சும் புஜபல பராக்கிரமம் கொண்ட வீரா! யாராலும் வெல்ல முடியாத உன்னை யார் வென்றார்? யார் கொன்றார்? உன் வினை கொன்றதா? ஊழ் வினை கொன்றதா? எவ்வினை கொன்றதோ யாது அறிவேன்?

தான் உயர்ந்த தவத்தினால் வான் உயர்ந்த தவத்தினாய்! நீ மறைந்த விதத்தினால் உனை வென்றவன் தான் உயர்ந்தனனோ? உயர்ந்தவனோ?

**இந்திரசித்தன் :** (சினம்கொண்டு)
வென்றவன்? யாரை யார் வென்றவன்? சூதுமதியால் சுயநலம் கொண்டு, ஏது மறியாத தன் உடன்பிறப்பை, வாதிடவோ போரிடவோ முடியாமல் வஞ்சமதாய்க் கொன்றதனால் அவன் வென்றவனா?

**மண்டோதரி :** (தெளிவு இல்லாதவளாக) மேகநாதா நீ என்ன கூறுகின்றாய்?

**இந்திரசித்தன் :** குலம் காத்த, தன் மானம் காத்த........... கோமகனுக்குக் கூற்றுவனாய் வந்தான் அந்த விபீடணன்

**மண்டோதரி :** என்ன? விபீடணனா கொன்றான்? உன் சிற்றப்பனா?

**இந்திரசித்தன் :** அப்படிச் சொல்லாதே. நா கூசுகின்றது. அவன் சிற்றப்பனில்லை. இனி அவன் எனக்கு இற்றப்பன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட தமையனையும், குலத்தையும், சுற்றம் சூழலையும் மறந்து, கண்டவனைக் கடவுளாகக் கருதி, இன்றளவும் தனை வளர்த்து ஆளாக்கித் தரணியிலே தலைநிமிர வாழவைத்த செயல் மறந்து, கடுகளவும் நன்றியிலா நாயோனின் நய வஞ்சகத்தால் கொலையுண்டான் கும்பகர்ணன்.

**மண்டோதரி :** இது உண்மைதானா?

**இந்திரசித்தன் :** ஆம் தாயே! வந்தவன் கொல்லவில்லை.. நாம் வளர்த்தவனே நமைக் கொன்றான். இவன் இல்லையேல் எமக்கு இழப்பும் இல்லை, இறப்பும் இல்லை.

**மண்டோதரி :** (துக்கமும் சினமும் கலந்தவளாக) ஐயோ விபீடணா ! விபீடணா ... இதுவா உன் நீதி .....

உன் அண்ணன் செயல் கண்டு நீ அஞ்சினாய். அது பிழையெனக் கெஞ்சினாய். அவர் சினம் கண்டு நீ கொஞ்சினாய். உன் உயிரில் கொண்ட ஆசையில் நீ மிஞ்சினாய். நஞ்சினும் கொடிய சிந்தையால் எமை வஞ்சினாய். உடன் பிறப்பை - உன் குலத்தை அழிக்க வந்த பகை என்று அறிந்தும் - அவர் பால் தஞ்சினாய்.

இவை அனைத்தும் எமை வருத்தவில்லை. ஆனால் எம் குலம் அழிய வழி சமைத்தாய். உன் குடிகெடுக்க நாம் என் செய்தோம்? இல்லை. உன் மூத்தோன் என் செய்தான் ? ...............

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்தோன் செயல் பிழையோ எனப் பார்த்தார். அதில் தோற்றார். அவர் முடிவை மாற்றார் என்பதால் இனிப் போரில் குதிப்பதே சரியெனப் போந்தார் உயிர் மாய்ந்தார் உன் உடன் பிறப்புக் கள், உற்றார் உறவினர் அத்தனை யோரும். ஆனால் நீயோ........உன் ஒரு உயிர்காக்க ஏனையோர் உயிர் குடித் தாய். நீயோ நீதிமான்?...நீயோ வீரன்?.... நீயோ அறிவாளி?... உன் அண்ணனைப் பழித்தாய். அதைவிட உன் செயலே கொடியது...... கொடியது......கொடியது.....

**இந்திரசித்தன் :** அம்மா! தந்தையின் செயலை இழித்துக் கூறாதே. அவரை நீ அறியாயா? அவர் பெருமை நீ உணராயா? எம் தந்தை எண்ணியே கருமமாற்றுவார். ஆற்றின் பின் அதை எண்ணவே மாட்டார்.......எம் தந்தையோ ஆயிரம் வேதப் பொருளை அறிந்து ஆன்றவிந்து அடங்கிய அறி வுடையவர். குபேரனின் மூத்தோன். பரம சிவனுக்கு பரம மித்திரன்.

வேதாப்பியாசங்கள், வித்தைகள், விரதங்கள், ஸ்நானம் சுபகர்மானுஸ்டா னம் முதலிய கிரியைகள் நிறைந்தவர். தன் குலத்தவர்க்கு ஈஸ்வரனாயும், தர் மாதர்மங்களையும், ஆசாரங்களையும் அவர்களுக்கு நடத்திக் காட்டுகின்றவர். சௌர்யத்திலும் புத்தியிலும் நிகரில்லா தவர். ஆயுதம் தரித்து திவ்ய ரதத்தி லேறி பிரசண்டமான வில்லைக் கையில் பிடித்து யுத்தகளம் சென்றால்! பகை அஞ்சும். அவரைக் கெஞ்சும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளிமாமலை எடுத்து வேழங்கள் எட்டும் வென்று, வெள்ள நீர் உலகம் ஆண்ட வாரணம் பொருத மார்பர். கைலயங்கிரிதனை எடுத்த தோளர். சாமகானம்பாடி சங்கரன் வாளும் பெற்று மூன்றுகோடி வாழ் நாள் ஆயுளும் பெற்ற தீரர்.

என் தந்தையின் அருமை பெருமை தனை இந்த ஆரியர் அறிவாரா?

பலதாரம் கட்டியதால் தன் பதியை வஞ்சித்த காமாந்தக்காரனாம் எந்தை ஹ.....ஹ.....ஹ....(பயங்கர சிரிப்பு)

இங்கு வந்த ரகுராமன் தம்பி என்ன ஒரு தாரம் பெற்றவளா? இல்லை அவன் தந்தை என்ன ஒருதாரம் கொண்டவனா?

ஆரியனாம் தசரதன் பலதாரம் கட்டுவது தர்மம். திராவிடன் தசக்கிரீவன் கட்டினால் அதர்மம்.

விந்தையான விளக்கங்கள். வேடிக்கையான நீதிகள்.

கொடுத்தும் எடுத்தும் சுகம்காண முடியாதோர்க்கு குடும்பம் பெரும்பாடு அது ஒரு கேடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாம்பு தேரையைப் பிடித்தால் பாவம், கருடன் பாம்பைப் பிடித்தால் லாபம். (வெறிபிடித்துச் சிரிக்கிறான்)

**மண்டோதரி :** (பயந்தவளாக உரக்க அழைக்கிறாள்) மேகநாதா....

**இந்திரசித்தன் :** எந்தை காமவெறியனாம், சிந்தையில் மையல் கொண்டு சீதையைச் சிறைபிடித்தாராம். இதுதான் குற்றமென்று எந்தையைப் பழித்து இங்கிருந்து ஓடித் தஞ்சம் புகுந்தான் இராமனிடம் என் இற்றப்பன்-விபீடணன்.

போராடத் துணிவின்றி உயிருக்குப் பயந்து ஓடி ஒளித்த உனக்கு நீதி ஒரு கேடா? நீ வாழ்வதும் ஒரு வாழ்வா?

பேடியே! காட்டிக் கொடுத்து உயிர் வாழ்வதிலும் நீ...ச்சீ.

மண்ணில் மானிடனாகப் பிறந்த எந்தை மாற்றான் மனைவியைச் சிறை பிடித்தது. மன்னிக்க முடியாத மாபெரும் குற்றம் என்று கூறி, என் தந்தையை மட்டுமன்றி,உன் உடன்பிறப்புக்களையும் உற்றார், உறவினர் அனைவரையும் அழிக்க மூலப்பொருளாய் இருக்கும் நீ தஞ்சம் புகுந்திருக்கும் எம் பகைவர் யார் என்பதை நீ அறிவாயா? இல்லை அறியாயா?

தன்னை ஒறுத்து விண்ணை அடைய தனித்திருந்து தவம் செய்யும் தவசிரேஸ்டரின் தர்மபத்தினியை, தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியால் மாயமான சேவலாக மாறி விடிவெள்ளி வருமுன் கூவி, அந்த மகரிஷியை வெளியே அனுப்பி, அவர்வேடம் தாங்கி, தன்மோகம் தீர அனுபவித்து அவள் கற்பைச் சூறையாடினானே தேவ லோகத்து அதிபனாம் கேடுகெட்ட இந்திரன், இவன் காமாந்தக்காரனில்லையா? காமுகனில்லையா? கசடனில்லையா? கயவன் இல்லையா? கபடனில்லையா?

மண்ணில் பிறந்தோன் மாற்றான் மனைவியைச் சிறை பிடித்தால் அவன் காமவெறியன் - காமாந்தக்காரன்.

விண்ணில் பிறந்தோன் பூசிக்க வேண்டிய ரிஷி பத்தினியை தன் இச்சை தீரக் கொச்சைப் படுத்தினால்..........

அந்த வழியில் வந்தோர் உனக்குச் சொந்தம்.... நீ அவர்களுக்கொரு பந்தம்.

மதிகெட்டவனே! குலத்தைக் கெடுக்கவந்த கொடியவனே-தர்மம் என்ற போர்வையில் எம்மை நீ இன்று தறிக்கலாம். ஆனால் நீயும் ஒரு நாள் தனிமையில் தறிக்கத்தான்படுவாய்.

அன்னையே! திரிகால ஞானியாம் எம் தந்தையின் செயலை நாம் இன்று உணராமல் இருக்கலாம்...ஆனால் அவர் உமக்கு ஒரு நாள் தரிசனம் தருவார். அன்று விளங்கிக் கொள்.

என்னை இந்த நிலைக்கு உயர்த்தி ஆளாக்கிய என் தந்தைக்கு நான் செய்யவேண்டிய கடமை உண்டு. நாளை நானே போர் நடத்துவேன். வெற்றி இல்லையேல் வீரமரணம். இன்றே விடைதருவாய் தாயே!

-திரை-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி - 2

இடம்

**இராவணன் அரண்மனை**

பாத்திரங்கள்

**இராவணன்**
**மாவீரன்**

[இராவணன் தன் அரண்மனையில், போர்த்தகவல் அறியும் (பொருட்டு) ஆவலோடு அங்கும் இங்கும் நடந்தவனாக நிற்கிறான். அப்போது அங்கே போர் வீரன் ஒருவன் வருகின்றான். வந்த மாவீரன் இராவணனை வணங்கி நிற்க அது கண்ட இராவணன் ஆவலோடு வினவுகின்றான்.]

**போர்வீரன் :** (பணிவாக) பிரபு! வணங்குகின்றேன்.

**இராவணன் :** (ஆவலோடு)இந்திரசித் வென்றுவிட்டானா?

**போர்வீரன் :** (சிறிது தயங்கியவாறே) இந்திரசித்தை.. வென்றுவிட்டார்கள்

**இராவணன் :** (கோபமாக ஆவேசத்துடன்) என்ன?...

**போர்வீரன் :** கொன்றுவிட்டார்கள்.........

[இதைக் கேட்டதும் இராவணன் ஆத்திரம், துக்கம் கலந்த வேகத்தால் போர் வீரனின் கழுத்தைப் பிடித்தவனாக]

**இராவணன் :** கொன்றுவிட்டார்களா?...........

**போர்வீரன் :** (நடுங்கியவனாக) பகைவர்கள்.. பகைவர்கள்...........

[தன் பிடியைத் தளர்த்திக் கொண்டு மகன் பிரிவு தாளாதானாய் வேதனையால் தன்னை மறந்து வாய்விட்டு உரத்து ஓலமிடத் தொடங்கினான்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இராவணன் :** (உரத்த குரலில்) மகனே மேகநாதா..... மேகநாதா!!!....(சற்றுத் தணிந்த குரலில்) நீயுமா என்னை விட்டுப் போய்விட்டாய்? (மேலும் வேதனையும் இரக்கமும் தொனிக்க) நீயும் என்னைவிட்டுப் போய் விட்டாயா? ஐயோ மேகநாதா..மேகநாதா மேகநாதா....(நிலத்தில் அறைகின்றான்) மகனே! மேகநாதா.....ஒப்பில்லாத மரக தமே! வீரசிகாமணியே!!......தேவர்களுக் கதிபதியான இந்திரனையே வெற்றி வாகை சூடிய வீரனே! தீரனே!! சூரனே!!!

(அழுவதை நிறுத்தி நெஞ்சை நிமிர்த்தி வீராவேசத்தோடு) நீ கோபங் கொண்டால், உன் பாணங்கள் காலாந் தகனையும், மந்தர பர்வதத்தின் சிகரங் களையும் பிளக்குமே. (வேதனையால்) மகனே..... மகனே......

(வீராவேசத்தோடு) மதம்பிடித்த யானையுடன் பொருதி, அதன் மத்தகத் தைப் பிளந்தபோது என் மார்பில் தந்தம் பாய்ந்த போதும் எனக்கு நொந்ததில் லையே.. ஆனால் (வேதனையோடு) உன் பிரிவின் செய்தி தாங்கொணா வேதனை யைக் கொடுக்கின்றதே மகனே. (வீரத் தோடு) கைலயங்கிரியைத் தூக்கும் போது கலங்காத நெஞ்சு (வேதனை யோடு) கையாலாகாதவர்களால் சரிந்த உன்மெய்யைத் தூக்க அஞ்சுகிறதே மகனே!....

எனக்குக் கிரிகை செய்வாய் என்று இருந்த என்னை,உனக்கு கிரிகை செய்ய வைத்துவிட்டாயே மகனே! ....மகனே!...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வீரனைப் பார்த்து) மா வீரனே!.. என் மைந்தன் கையில் வாளும், அவன் தேர்மேலும் இருக்கும்வரை, அவனை யாரும் வெல்ல முடியாதே..... கொல்ல வும் முடியாதே?

**போர்வீரன் :** (தயங்கியவனாக) தங்கள் இளையோன் அங்கு இருக்கும்வரை நாம் வெல்லவும் முடியாது. யாரையும் கொல்லவும் முடி யாது.

**இராவணன் :** (சினம்கொண்டவனாய்) என்ன சொன் னாய்?

**போர்வீரன் :** (தயங்கியபோதும் நிதானத்துடன்) மன் னிக்க வேண்டும் பிரபு... தங்கள் குலத் தின் இரகசியங்கள் அனைத்தையும் அறிந்தவர் தங்கள் இளையோன்.

**இராவணன் :** (சினம் மாறாதவனாய்) அதனால் என்ன?

**போர்வீரன் :** (நிதானமாகவே பெருமையோடு) தங்கள் வீர மைந்தர் இந்திரசித்தரின் பிரம்மா அஸ்திரமே சகலரையும் மூர்ச்சிக்க வைத்து விட்டது (தயங்கியவனாய்) ஆனால்.......

**இராவணன் :** (குழம்பியவனாய்) ஆனால் என்ன?

**போர்வீரன் :** (நிதானமாக) தங்கள் தம்பி விபீடணர் அநுமான் மூலம் சஞ்சீவி மலையைத் தருவித்து அனைவர் மூச்சையும் தெளிய வைத்து விட்டார். இல்லையெனில் (பெருமையோடு) அந்த அஸ்திரம் ஒன்றே போதும்...... அன்றே வென்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இராவணன் :** (வெஞ்சினம் கொண்டவனாக உரக்க) விபீடணா...உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்யும் துரோகி... அன்றே உன்னைக் கண்டதுண்டமாக வெட்டிப் போட்டிருக்க வேண்டும். ஆனால் உடன் பிறப்பாயிற்றே என்று ஒறுத்திருந்தேன்....

தானாடாவிட்டாலும் தன் தசை ஆடும் என்பார்கள். இப்போ என் உடலே ஆடுகின்றதே உன் செயல் கண்டு.

**போர்வீரன் :** அது மட்டுமில்லைப் பிரபு

**இராவணன் :** (வெறுப்போடு) வேறு என்ன செய்தான் அந்த வெட்கம் கெட்டவன்.

**போர்வீரன் :** வண்டாக உருக் கொண்டு.....

**இராவணன் :** உருக்கொண்டு..

**போர்வீரன் :** இங்கு வந்து அனைத்தையும் சுற்றிப் பார்த்து......

**இராவணன் :** சுற்றிப் பார்த்து

**போர்வீரன் :** தங்கள் மைந்தர் இந்திரசித்தர் செய்த நிகும்பலை யாகத்தைக் கண்டு,

**இராணவன் :** கண்டு....

**போர்வீரன் :** உடன் பறந்து அங்கு சென்று

**இராவணன் :** சென்று...

**போர்வீரன் :** பகைவரிடம் சகலதையும் கூறி யாகத்தை அழிக்கும் வழிகளையும் கூறியவரும். ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இராவணன் :** (கோபமிகுதியால் காலை உதைத்து ஆவேசமாக)
விபீடணன்....! விபீடணன்...! துரோகி....

யானையைப் பிடிக்க யானையையே பயன் கொள்வர். அதேபோன்று என்னை அழிக்க நீயே பயனானாய் பாதகா.

**போர்வீரன் :** (சிறிது தயங்கியவனாய்) பிரபு.. சொல்ல.. அஞ்சுகின்றேன்.

**இராவணன் :** (ஆத்திரமாக) வே ண் டி ய தி ல் லை. துணிந்து சொல்.

**போர்வீரன் :** (நிதானமாக ஆனால் தயங்கியபடி) இந்தப் போர் சீதையின் பொருட்டல்ல என்றும், தங்களின் கீர்த்தியும், வீரமும், தவ வலிமையும் பெற்ற வரங்களும் கண்டு மனம் பொறாத தங்கள் இளையோன் விபீடணர், நேராகப் போராட வல்லமையின்றி, நெடுநாள் நெஞ்சுள் கொண்ட பகைமுடிக்க இதைத் தனக்குச் சாதகமாக ஆக்கிக்கொண்ட தம்பியின் சதி என்றும்; இந்தப் போர் இராவண-விபீடண போரேயன்றி வேறல்ல என்பதாலும், ஒரு கொடியில் பிறந்த உடன் பிறப்புக்களின் மோதலில் நாம் ஏன் வீணே இறக்க வேண்டும் என்றும் நம் வீரர்களிடையே ஒரு மனச் சோர்வு ஏற்பட்டிருப்பதுபோல் தோன்றுகின்றது.

**இராவணன் :** இந்த ஐயம் எழக் காரணம்..?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**போர்வீரன்** : அயலான் மனைவியை அண்ணன் கவர்ந்தால், அவளைக் கொண்டவனுக் கில்லாத அக்கறை இவருக்கேன்...........? அண்ணன் பிழை செய்தால் ஒதுங்கி இருப்பதை விட்டு, இதை ஒரு பொருட் டாக வைத்து, பகைவருடன் சேர்ந்தது மட்டுமன்றி - தன் உடன் பிறப்பை மட்டு மன்றி குலத்தையே அழிக்க முன்னிற் கின்றார் விபீடணர் என்பதே. இல்லை யெனில் மூத்தோனுக்குப்பின் முடி சூட இருந்த தன் மகன்போன்ற இந்திரசித் தரைக் கொல்லவும் வழி கூறுவாரா...?

**இராவணன்** : விபீடணா......உடன் பிறந்தே கொல்லும் வியாதியாகி விட்டாய்.

உண்மைதான். எனக்குப்-பகைவன் வேறு யாருமல்ல. நீதான். நீயேதான். உண்மையில் இது இராவண - விபீடண யுத்தமேயன்றி வேறில்லை.

விபீடணா! முதலில் உன்னை நான் மாய்ப்பேன். அதன் பின்பே மற்றை யோரைச் சாய்ப்பேன்.

(வீராவேசத்துடன்)

என் தலைமையில் நாளை படை புறப்படத் தயாராகட்டும்.

**-திரை-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - 3

இடம்

**இராவணன் அரண்மனை**

பாத்திரங்கள்

**இராவணன்**
**மண்டோதரி**

[இராவணன் இரண்டாம் நாள் போர்க் களத்திற்குப் போவதற்குத் தன்னை ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறான்.

நெற்றியில் திலகமிட வந்த மனை யாளின் கையில் இருந்து மங்கலத் திலகம் தவறி நிலத்தில் வீழ்கின்றது. மனம் பதறுகிறாள் அந்த மாதரசி.

சிந்திய திலகத்தில் விரல் நனைத்து, கலங்கிய சிந்தையாளாய் கரம் நடுங்க அவன் நுதலில் திலகம் இடுகின்றாள், அந்த இலங்காபுரிவேந்தனின் திலகமான மண்டோதரி.

மனையாளின் நிலைகண்டு மலை யொத்த இராவணனின் நெஞ்சம் நிலை தடுமாறுகின்றது. என்றும் இல்லாத அளவு அவன் மனம் இன்று சஞ்சலத் தால் அலை பாய்கின்றது. தான் வெறும் சூனியத்துள் அகப்பட்டவன் போன்ற உணர்வால் பீடிக்கப்பட்டான். வைத்த கண் வாங்காமல் தன்னையே நோக்கி நிற்கும் தன் கணவனின் நிலை கண்டு பதறியவளாக நடுங்கும் குரலில்]

**மண்டோதரி :** பிரபு! இது நாள்வரை ஏற்படாத ஒருவித கலக்கம் இன்று என்னுள் ஏற்பட்டிருப்பது போன்ற உணர்வை அடைகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இராவணன் :** மண்டோதரி! "இன்றுபோய் நாளை வா" என்று நேற்று போரில் என்னை அவன் அனுப்பியதில் அர்த்தம் இருப்பதாகவே உணர்கின்றேன்.

**மண்டோதரி :** பிரபு!

**இராவணன் :** மண்டோதரி! இது நாள்வரை உன்னிடத்தில் காணாத எழிலை இன்றுதான் நான் காண்கின்றேன். உன் எழிலை அள்ளிப் பருகக் கண்கள் துடிக்கின்றன. இன்று முழுவதும் உன்னைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போல் தோன்றுகின்றது. என் உள்ளம் இன்று சூன்யமாகவே இருக்கின்றது. ஏனோ எனக்கொன்றும் விளங்கவில்லை.

**மண்டோதரி :** பிரபு! அலைகடல் ஓய்ந்தது போன்ற அமைதியான இன்றைய உங்கள் பேச்சு என் மனதிற்கு இன்பமூட்டுகின்றது. தங்களுடன் மனம் விட்டுப் பேச வேண்டும் போல் தோன்றுகின்றது.

**இராவணன் :** கண்ணே! உன் மனம் மகிழும்படி இன்று இந்த இராவணன் காட்சி அளிப்பான். இன்று இந்த இராவணனை பூரணமாகத் தரிசித்துக் கொள். இந்த இராவண தரிசனம் இன்று தவறின் இனி என்று கிடைக்கும் என்பது ஐயமே.

**மண்டோதரி :** ஐயனே! இது நாள்வரை நான் தரிசித்த தாங்கள்?

**இராவணன் :** மனப் போராட்டங்களுக்கு மத்தியில் தன் கடமையைச் செய்ய நிம்மதியற்றுப் பழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமந்து செயலாற்றி வந்தேன். இன்றோ என் மனப் பாரங்கள் அகன்று வெறுமை யாக இருக்கின்றேன். இன்றைய போரில் ............அதற்கு முன் என் முழுமையான தரிசனத்தை நான் உனக்குக் காட்ட ஆசைப்படுகின்றேன்.

**மண்டோதரி :** சுவாமி! தங்களின் வார்த்தைகள் எனக்கு விளங்கவேயில்லை.

**இராவணன் :** இதுநாள்வரை நீ விளங்கிக் கொள்ளா ததையிட்டுக் கவலைப் படாதே. ஆனால் இன்றைய எனது வார்த்தையில் ஒன்றை யும் கவனமின்றிச் சிதறிவிடாதே. உன் கவனம் முழுமையாக என்னிடம் இல்லா விட்டால், இந்த இராவணனின் தரிச னத்தை உன்னால் முழுமையாகத் தரி சிக்க முடியாது. நீயும் உலகத்தோர் போன்றே உண்மை நிலையை உணராத வளாகி விடுவாய்.

இந்த இராவணனுக்கு பெண்ணால் தான் அழிவென்று விதியிருந்தால், அதை எந்த மதியாலும் வெல்லமுடியாது.

**மண்டோதரி :** பெண்ணால் தான் அழிவு என்று தெரிந்து கொண்டும் அந்தப் பெண்ணை இதுநாள் வரை விடுவிக்காமல் இருந்து மேலும் மேலும் அழிவைத்தானே தேடிக் கொண் டீர்கள்.

(இராவணன் அது கேட்டுச் சிரித்துக் கொண்டே)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இராவணன் :** ஹஹ்....ஹ்......ஹ....அந்தப பெண்ணால் தான் எனக்கு அழிவு என்றால் நான் தொட்டே இருக்கமாட்டேன். என்றோ விட்டிருப்பேன். நான் அவளை விட்டாலும் என்னை விடமாட்டாள் அந்த சூர்ப்ப னகை.

**மண்டோதரி :** சுவாமி! தாங்கள் என்ன சொல்கிறீர்கள்?

**இராவணன் :** இதுவரை என் உள்ளக் கருவறையில் யாருக்கும் தெரியாத சில விசயங்களை உனக்கு நான் வெளிச்சம் காட்டப் போகின்றேன். அந்த வெளிச்சத்தில் நீ இந்த இராவண தரிசனத்தைக் கண்டு கொள். இராவண தரிசனம் தெளிவு ஏற் படாதபோது உன் சந்தேகம் என்ற தீயின் ஜுவாலையில் அதை நன்றாகப் பார்.

என் அழிவுக்கு பெண்தான் கார ணம் என்பதை நான் நன்கு அறிவேன். ஏனையோர் கருதுவது போன்று அது.... சீதை அல்ல.

**மண்டோதரி :** சீதை இல்லையா?....பின் யார் பிரபு.

**இராவணன் :** (நிதானமாக) சூர்ப்பனகை.

**மண்டோதரி :** என்ன! சூர்ப்பனகையா..? தங்கள் உடன் பிறப்பா?

**இராவணன் :** ஆம்.என் உடன் பிறப்பேதான்.வைரத்தை வைரத்தால்தான் வெட்ட முடியும், என்னை அழிக்க என் உடன் பிறப்பால்தான் முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மண்டோதரி** : பிரபு! தாங்கள் என்ன சொல்கிறீர்கள்? தங்கள் உடன் பிறப்புத் தங்களையே கொல்வதா?

**இராவணன்** : அதுதான் விதி. சூர்ப்பனகையின் மணாளன் விதிவசத்தால் என் கையால் மாண்டான். அதை நெஞ்சுள் வைத்து வஞ்சம் வளர்த்தாள் சூர்ப்பனகை. நேரடியாக ஏதும் செய்ய இயலாதவள் சந்தர்ப்பம் பார்த்திருந்தாள். சீதையைப் பயன் கொண்டாள்.

**மண்டோதரி** : சீதையைப் பயன்கொண்டாளா? அது எப்படிப் பிரபு?

**இராவணன்** : எனக்கு அபகீர்த்தி உண்டாக்கி அதன் பின் அழிவை உண்டாக்க எண்ணினாள்...

**மண்டோதரி** : தெளிவாக இல்லையே பிரபு.

**இராவணன்** : வனத்திடை வந்த ஆரிய உடன்பிறப்புக் களைக் கண்ட சூர்ப்பனகையின் உள்ளத்தில் உறங்கிய வஞ்சம் விழித்துக் கொண்டது. ஆரியர்களான அவர்களால் என்னை அழிக்க வழிசமைத்தாள். அவர்களின் திடசித்தத்தை சோதிக்க முனைந்தாள். மூக்கறுபட்டாள். தன் சதிக்கு ஆரிய உடன் பிறப்புக்களே உகந்தவர்கள் எனத் திடம் கொண்டாள்.

திக்கெட்டும் கொடிகட்டிப் புகழ் பரவ அரசோச்சும் இலங்கை வேந்தனின் ஒரே சகோதரி அன்னியரான ஆரியரால் அவமானப்படுத்தப்பட்டாள்என்று இலங்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியெங்கும் செய்தி பரவ விட்டாள். தன்னை ஒரு பரிதாபத்துக்குரிய பொருளாக மாற்றியும் கொண்டாள். என்னிடமும் வந்தாள்.

மூக்கறுபட்ட நிலையில் என் உடன் பிறப்பைக் கண்டதும் சகோதர பாசம் மேலோங்க உணர்ச்சிப்பெருக்கால் உளம் நொந்தேன். வெஞ்சினம் கொண்டேன்.

இலங்கை வேந்தன் இராவணனின் பெயர் சொன்னாலே அண்டம் கிடுகிடுக்கும் ஆகாசம் நடுநடுங்கும்.அப்படி இருக்க என்தங்கையை மானபங்கப் படுத்திய அந்த மானிடப் பதரின் மண்டையை சிதறடிக்கிறேன் பார் என்று வெகுண்டெழுந்தேன்.

அவர்கள் மாழ்வதைவிடத், தான் அவமானப் பட்டதுபோன்று அவர்களோடு வந்த அந்தப் பெண் சீதையும் அவமானப் பட வேண்டும். அது கண்டு அந்த ஆரியர் நாளெல்லாம் பொழுதெல்லாம் வருந்தி வருந்தி சிறுகச் சிறுகச் சாக வேண்டும். எனவே நீ அவளைச் சிறை எடுத்தால்போதும் என்றும், சீதையின் அழகை வர்ணிப்பதன் மூலம் சீதையின் மேல் நான் மோகம் கொள்ளவேண்டும் என்றும் எண்ணிச் செயல் பட்டாள்.

என் உடன் பிறப்பின் மானத்தையே பெரிதாக எண்ணிய எனக்கு சீதையின் அழகோ அன்றி வேறெதுமோ எனக்குப் பெரிதாகத் தெரியவில்லை. சீதையைக் கவர்ந்து - அந்தப் பிரிவால் ஆரிய உடன் பிறப்புக்களை அணுஅணுவாக வதைக்க வேண்டும். என்பதற்காகவே சீதையைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறை எடுத்தேன்....... அது மட்டுமல்லக் காரணம்.

**மண்டோதரி :** வேறென்ன?

**இராவணன் :** சூர்ப்பனகையின் விருப்பப்படி அவள் மனம் குளிர சீதையைச் சிறைபிடிப்பதால் சூர்ப்பனகையின் கணவரைத் தெரிந்தோ தெரியாமலோ நான் கொன்றதால் ஏற்பட்ட பெரும் பழியை - சூர்ப்பனகையின் உள்ளத்திலே நெடுநாளாக புகையாமல் எரிந்துகொண்டிருக்கும் வஞ்ச உணர்வை மனவெறுப்பைக் குறைக்கலாம் - போக்கலாம் என்ற பேரவாவால் செயல்பட்டேன். அதனால் இன்று பழிபட்டேன்.

**மண்டோதரி :** கேட்டால் சினம் கொள்ளமாட்டீர்களே..?

**இராவணன் :** உன் சிந்தை தெளிய வேண்டும். இந்த இராவண தரிசனம் உனக்குப் பூரணமாகக் கிட்ட வேண்டும். அஞ்ச வேண்டியதில்லை.....

**மண்டோதரி :** தங்களுக்குச் சீதையின் மேல்.....

**இராவணன் :** எள்ளளவும் அவளை நான் எண்ணியதில்லை. இளவயதில் வாலிபமுறுக்கில் நான் தெரியாமல் செய்த தவறுகளை என்றோ உணர்ந்து என்னைத் திருத்திக் கொண்டேன். அன்று தவறு செய்தவன் இன்றும் அதே தவற்றைச் செய்ய வேண்டும் என்பது நியதியல்லவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதையை நான் விரும்பி இருந்தால் அந்தச் சுயம்வரத்தில் தனுசை வளைக்கு முன்பே நான் கவர்ந்திருக்கலாம்.

**மண்டோதரி :** ஒரு பெண் கணவனிடம் கேட்கக் கூடாத கேள்வி .

**இராவணன் :** உன் உள்ளம் இருள் அகன்று ஒளிபெற வேண்டும். இங்கு இப்போ கணவன் மனைவி இல்லை. இரண்டு ஆத்மாவின் உணர்வுகள் சங்கமிக்கின்றன - கேள்.

**மண்டோதரி :** சுயம்வரத்திற்குச் சென்ற ஐம்பத்தாறு தேசத்து இளவரசர்களும் சீதையின் பால் மோகம் கொண்டே சென்றிருந்தார்களாம்......

**இராவணன் :** இந்த இராவணனைத் தவிர. இவன் ஒரு சிவ பக்தன். சிவனை எவ்வாறு பூசிக்கின்றானோ அதை விட மேலாக சிவ சின்னங்களை மதிப்பவன் - பூசிப்பவன் - நேசிப்பவன் - யாசிப்பவன் இந்த இராவணன்.

சீதையின் சுயம்வரத்தில் சிவதனுசு ஒரு போட்டிப் பொருளாக இருப்பதை அறிந்தேன். உள்ளம் பொருமினேன். பூசிக்க வேண்டிய பொருளாயிற்றே அந்தத் தனுசு. ஒரு முறையாவது அதைத் தரிசிக்க வேண்டும் என்று விரும்பினேன். தரிசித்தேன். அவ்வளவுதான்...

**மண்டோதரி :** எல்லாம் அறிந்த தாங்களே எப்படித் தங்கள் சகோதரியின் வஞ்சனையில் சிக்கிக் கொண்டீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இராவணன் :** அது தான் விதி என்பது.

பெற்ற பிள்ளைகளின் பிரிவாலே தந்தை மாள வேண்டும் என்பது விதி. நாடாள வேண்டியவனைக் காடாள வைத்தது விதி என்றால், அந்த விதி இராவணனுக்கு மட்டும் என்ன விதிவிலக்கா ?

அழிவுகள் வர இருக்கும்போது அறிவுகள் பயன் படமாட்டா.

சகோதர பாசம் என் கண்ணை மறைத்தது. குடிமக்கள் கொதித்தார்கள். இவர்கள் எண்ணத்துக்குச் செவி சாய்த்தேன். அதன் விளைவு தான் சீதையைச் சிறை எடுத்தேன்.

இன்று நான் குடிமக்கள் குரலுக்குச் செவிசாய்த்தது பிழையெனலாம்.ஆனால் நாளை ஒரு குடிமகனின் சொல் கேட்டுக் கோமான் தன் குலமகளை வனம் அனுப்புவான் அதை ....?

**மண்டோதரி :** பிழை எனத் தெரிந்தபின் திருத்தி இருக்கலாமே ?

**இராவணன் :** பாதி உண்ட தேரையைப் பாம்பு கக்குவதால் பிழைக்காது.

சீதையால் தான் இராவணனுக்கு அழிவென்றால் சீதையை விடுவதில் பலனுண்டு. ஆனால் சூர்ப்பனகைதான் இராவணன் அழிவுக்கு கால் என்றால் வீர மரணத்தைத் தழுவிக் கொள்வதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரனுக்கு அழகு.

என் தங்கைப்பாசத்தால் நான் பாவி ஆனேன். என் தம்பியின் வேஷத்தால் நான் ஆவி போவேன்.

நான் செய்தது தவறு என்ற ஒரே காரணத்திற்காக என்னைவிட்டுப் பிரிந்த என் தம்பி தஞ்சம் புகுந்தானே அந்த ஆரியன், அவன் போர்க்களத்தில் என்ன கேட்டான் என்பதை அறிவாயா ?

**மண்டோதரி :** என்ன கேட்டான் ?

**இராவணன் :** சிறைவைத்திருக்கும் சீதையை விடு என்றான்.

**மண்டோதரி :** அதில் தவறொன்றும் இல்லையே ?

**இராவணன் :** அது மட்டும் என்றால் தவறில்லை. ஆனால் தேவர்களை நான் முறையில் வைக்க வேண்டுமாம்.

எங்களைத் தேவர்கள் வஞ்சித்த போது கிஞ்சித்தும் இரக்கம் காட்ட வில்லை. இன்று நாம் வஞ்சித்தோம் என்று வெஞ்சினம் கொள்கின்றார்கள். அதுவும் பாதகமில்லை. ஆரியனை ஆரியன்தான் ஆதரிப்பான். ஆனால் என் தம்பிக்குப் பட்டம் கட்டி அவனுக்கு அடி பணிந்து நான் குற்றேவல் செய்யவேண்டுமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டோதரி! விபீடணன் என் செயல் கண்டு வெறுத்தானில்லை . தான் அரசோச்ச வேண்டும் என்பதற்காகவே என்னை வெறுத்தான். இதை அந்த ஆரியன் கூறியபோதே உணர்ந்தேன்.

தன் மகளை இங்கு விட்டுத் தான் மட்டும் தனித்துச் சென்றது இங்கு உளவறிந்து கூறவேண்டும் என்பதற்காகவே.

சூர்ப்பனகையின் விருப்பத்திற்கு இணங்கி இராவிடில் ஊர் இரண்டு பட்டு பெரும் கலகமே உருவாகி அதில் வஞ்சத்தால் இராவணன் மடிவதை விட வெஞ்சமரில் இறப்பதையே விரும்பினான் இராவணன்.

**மண்டோதரி :** தங்கள் உடன் பிறப்புக்களே தங்களுக்குக் கூற்றுவன் என்பதை என்னாலும் இது நாள் வரை உணர முடியாமல் இருந்து விட்டேனே. தங்களைப் புரியாது உலகம் வீண் பழி கூறப்போகின்றதே பிரபு.

**இராவணன் :** இப்போதாவது தெரிந்து கொள் என் அழிவிற்குக் காரணம் வெளிப்பகை அல்ல - உள்பகையே - என் உடன் பிறப்புகளே என்பதை.

ஒருவனுக்கு அழிவு பிறனால் அல்ல. தன் சுற்றம் சூழல்களால்தான். இதற்கு இந்த இராவணனே ஒரு சாட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் ஒன்று, இந்த இராவணன் இறக்கலாம். ஆனால் என் இறைவன் - பரமேஸ்வரன் இருக்கும் இடமெல்லாம் இந்த இராவணேஸ்வரன் இருந்தே தீருவான். அவன் மேனியில் நீறு இருக்கும் வரை என் நாமம் ஒலித்துக் கொண்டே இருக்கும். இந்த உடல் மறைந்தாலும் இராவணன் புகழ் என்றும் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

போரில் இறப்பதால்தான் நான் தோற்றேன் என்றால், போர் இல்லாமலே அந்த ஆரியனும் ஒரு நாள் தோற்கத் தான் போகிறான்.

ஈரேழு உலகத்தையும் கட்டி ஆண்ட இராவணன் தன் அரசிழந்து கை கட்டிச் சேவகம் செய்வதா ? ஒருக்காலும் முடியாது. அப்படி வாழ்வதை விட போரிட்டே மடிவது மேல், மண்டோதரி விடை கொடு ! வருகின்றேன்.

**மண்டோதரி :** சுவாமி ! உங்கள் தரிசனத்தால் உள்ளம் தெளிந்தது. கலக்கம் மறைந்தது. உங்கள் புகழ் என்றும் ஓங்கும். சென்று வாருங்கள்.

**-திரை-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவுக் காட்சி - 4

| இடம் | பாத்திரங்கள் |
|---|---|
| **இராவணன் அரண்மனை** | **மண்டோதரி**<br>**போர்வீரன்** |

[மண்டோதரி சிந்தனையில் ஆழ்ந்தவளாக நிற்கிறாள். அப்போது அங்கு பதறியவனாக மாவீரன் ஓடி வருகின்றான்]

**மாவீரன்** : மகாராணி! எங்கள் கொடி சரிந்து விட்டது.

**மண்டோதரி** : (பதறியவளாக) மாவீரனே என்ன கூறுகின்றாய்

**மாவீரன்** : மகாராணி! எம் குலம் அழிந்தது, மாமேரு சரிந்து விட்டது. மன்னரை வஞ்சித்து விட்டார்கள்.

**மண்டோதரி** : பிரபு ! என்னைவிட்டுப் போய்விட்டீர்களா? ஐயா எப்படி ஐயா என்னை விட்டுப் போனீர்கள்.

எம்மை வஞ்சித்த தேவர்களின் கொட்டம் அடக்கி எம் நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் உம்மால் அன்றோ பெருமை வந்தது.

எம்மக்களின் இன்பதுன்பங்களில் பங்கு கொண்டு, பெற்ற குழந்தையைப் போல் மக்களைப் பாதுகாத்த உம்மை, உம் உடன்பிறப்பு வஞ்சித்தது போல் வஞ்சித்தாரில்லை. ஐயா, நீர் செய்தது தவறே இல்லையோ என அவர்கள் கிஞ் சித்தும் எண்ணாது, உமக்கு வந்த பகை யைத் தம் பகை போல் கருதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரும் உமக்காகப் போராடி உயிர் விட்டனரே ஐயா. உம் நாட்டு மக்களின் தேசபக்திக்கும், இராசவிஸ்வாசத்திற்கும் நீர் ஆயிரம் போர் செய்தாலும் போதாதையா. ஐயா... ஐயா...

சிறை பிடித்த சீதை, தங்களைப் பிழையாகக் கருதி, தன்னை ஒறுத்து உடல் வருத்தி மாளாதிருக்க அல்லும் பகலும் அவளைக் காப்பதிலேயே உம் சிந்தை இருந்ததுவே அன்றி, அவளைச் சொந்தம் கொண்டாட அல்ல என்பதை தங்கள் இராவண தரிசனத்தின் மூலம் தானே அறிந்தேன் இப்பாவி.

தாங்கள் சீதையால் சாகவில்லை. இந்தப் பாவிகளால் கொல்லப் பட்டீர்கள்

உங்களுக்காக வாழ்ந்த அனைவரும் போனபின் இனி நீங்கள் யாருக்காக வாழவேண்டும்.

வீரர்களே இல்லாத நாட்டை இந்தக் கோழைகளே ஆளட்டும். விபீடணன் போன்ற துரோகிகளே உருவாகட்டும்.

தங்கள் அழிவுக்குப் பெண் தான் காரணம் என்பதையும், ஏனையோர் கருதுவது போன்று ஜானகி அல்ல என்பதையும், தாங்கள் தங்கள் (இராவண) தரிசனத்தின் மூலம் தெளிவாக விளக்கியுள்ளீர்களே ஐயா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பாவிகளின் சூழ்ச்சிக்கு ஆளாகி வீண் பழி சுமந்து மாண்டீர்களே ஐயா.

தங்கள் இராவண தரிசன மூலம் உண்மை உணர்ந்து உவகை கொண்டேன். ஐயா! பாசத்தால் பழி சுமந்தீர்கள். வேஷத்தால் வீழ்ந்துபட்டுப் போனீர்கள். இனி..... இனி....

[ மயங்கி வீழ்கின்றாள் திரை மெதுமெதுவாக மூடப்படுகின்றது. திரைக்குப் பின்னால் ஒரு குரல் ]

ஆம் ! சிவபக்தன் இராவணனின் சிந்தையிலே சீதையைப் பற்றி சிந்தனையே இல்லை.
இதைக் கம்பரே

" வெள்ளெருக்கும் சடை முடியோன் வெற்பெடுத்த
திருமேனி மேலும் கீழும்
எள்ளிருக்க இடமின்றி உயிர் இருக்கும்
இடம் நாடி இழைத்த வாறோ
கள்ளிருக்கும் மலர் கூந்தல் சானகியை
மனச் சிறையில் கறந்த காதல்
உள்ளிருக்கும் என நினைந்து உட் புகுந்து
**தடவியதோ** ஒருவன் வாளி "

என்ற பாட்டின் மூலம் கூறி விட்டார்.

" விதி வரும் போது வீண் பழியும் வந்தே தீரும் " இதற்கு இந்த **இராவண தரிசனமே** சான்று.

**- திரை -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவண தரிசனம்



இந்திரசித்

(இ. இராஜரஞ்சன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரசித் ~ மண்டோதரி



இராஜரஞ்சன் சி. தர்மினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவண தரிசனம்



மேகநாதன் (இ.இராஜரஞ்சன்)

மண்டோதரி (எஸ். சாந்தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணன் - மாவீரன்



த. சித்தி அமரசிங்கம் ஆர். பிரேமதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவண தரிசனம்



இராவணன் (த. சித்தி அமரசிங்கம்)

மாவீரன் (பிரேமதாஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணன் - மாவீரன்



த. சித்தி அமரசிங்கம் ஆர். பிரேமதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணன் ~ மாவீரன்



த. சித்தி அமரசிங்கம் கௌரிதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராவணா தரிசனம்



மண்டோதரி (சி. தர்மினி)

இராவணன் (த. சித்தி அமரசிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணன் ~ மண்டோதரி



த. சித்தி அமரசிங்கம் எஸ். சாந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மண்டோதரி - இராவணன்



சி. தர்மினி த. சித்தி அமரசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவண தரிசனம்



மண்டோதரி (சி. தர்மினி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இ. இராஜரஞ்சன் – எஸ். சாந்தி – சிற்பாச்சாரி – ச. தேவநாயகம்
த. சித்தி அமரசிங்கம் – கௌரிதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சிற்பாச்சாரி



ச. தேவநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரசிகர் கூட்டத்தின் ஒரு பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவண தரிசனம்



இ. இராஜரஞ்சன் - த. அமரசிங்கம் - எஸ். சாந்தி - இ. சுகுணா
குழந்தை ஆஷா - சித்தி அமரசிங்கம் - கௌரிதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராவண தரிசனம்

## இலக்கிய நாடகம்

**கலைஞர்கள்**

இராவணன் : கலாவினோதன் **த. சித்தி அமரசிங்கம்**

மண்டோதரி :

1ம் மேடை : செல்வி. S. சாந்தி

2ம் மேடை : செல்வி. S. தர்மினி

இந்திரசித்தன் : **இ. இராஜரஞ்சன்**

மாவீரன் :

1ம் மேடை : செல்வன். கௌரிதாஸ்

2ம் மேடை : செல்வன் ஆர். பிரேமதாஸ்

நாடக வடிவம்

**வீணைவேந்தன்**

ஒப்பனை : கவிஞர். **நக்கீரன்** (கீழைத்தேய கலா மன்றம்)

R. சுகுணா, திருமதி. சித்தி அமரசிங்கம்

கலை : சிற்பாச்சாரி **ச. வேதநாயகம்**

மேடை அமைப்பு , உடை, நெறியாள்கை

கலாவிநோதன் **த. சித்தி அமரசிங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கு. செந்தில்வேல்

## திருக்கோணமலையில் திருக்குறள் மழை

"கடற்படை இருப்பதாலேயே திருக்கோணமலை மக்கள் நல்வாழ்வு வாழ்கிறார்கள். போர் ஏற்பட்டாலும் அல்லது போர் ஏற்படப் போகிறதுஎன்று வதந்தி இருந்தாலும் திருக்கோண மலை செழிப்பாக இருக்கும். அப்படிப் பட்ட ஊரில் இந்த மூன்று நாட்களில் திருக்குறள் பற்றிய சொற்போர்களைக் கேட்டு அவ்வூர் மக்கள் மகிழ்ந்தார்கள்.

பெரியதொரு ஊர்வலத்தோடு விழா தொடங்கியது. ஊர் வலம் மாரியம்மன் கோவிலில் ஆரம்பித்து இந்துக் கல்லூரி யில் வந்து முடிந்தது. திருவள்ளுவருடைய உருவத்தைத் தாங்கிக் கொண்டு தொண்டர்கள் வலம் வந்த காட்சி மிகவும் கவர்ச்சிகரமாக இருந்தது. விழாவில் ஏற்பாடு செய்யப்பெற் றிருந்த கலைக் காட்சியில் திருக்குறள் பற்றிய ஏராளமான பதிப்புக்களும், கலை சம்பந்தமான படங்களும், காட்சியில் வைக்கப்பெற்றிருந்தன. இக் காட்சியைச் சுவாமி சிவானந்த சரஸ்வதியின் சீடரான சச்சிதானந்த யோகியார் திறந்து வைத்தார்.

முதல் நாள் விழாவில் தலைமை வகித்த பண்டிதர் இரத்தினம் 'பேசுகையில், திருவள்ளுவர் விழாவை ஒவ்வொரு வீட்டிலும் கொண்டாட வேண்டுமென்றும், அது தமிழ் மக்களு டைய கடமை என்றும் குறிப்பிட்டார். பத்திரிகைகள் தமது முயற்சிக்குப் பெரிதும் ஆதரவு தந்ததை மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

வரவேற்பு உரை கூறிய தா. ஏகாம்பரம் அவர்கள் திருக்கோணமலை நகராண்மைக் கழகத் தலைவராவார். குறளின் பெருமை பற்றிக் குரல் கொடுக்க இந்தியாவில் இருந்து வந்திருத்த ம. பொ. சி. அ. ச. ஞானசம்பந்தம் ஆகியோரையும் ஏனைய அறிஞர்களையும் "வாருங்கள், வள்ளுவன் புகழ் வையமெல்லாம் பரவும்வகை செய்யுங் கள். வளமான வாழ்வுக்கு வழிகாட்டும் வள்ளுவன் குறளை வாரி வழங்குங்கள்" என்று கூறி இன்முகத்துடன் வரவேற்றார்.

திருக்குறளின் இலக்கிய நயங்களையும், அதில் கூறப் பட்டுள்ள அரிய கருத்துக்களையும் பற்றி மிகப் பல அறிஞர் கள். பேசினார்கள். இவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள், கூட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுறவு இயக்கத்திலும் பொதுநலப் பணியிலும் ஈடுபட்டவரும் திருக்கோணமலை தொகுதி பாராளுமன்ற அங்கத்தினரு மான என். ஆர். இராஜவரோதயம் அவர்களும்,ஸ்ரீ சிவஞானக் கிராமணியாரும், பேராசிரியர் ஞானசம்பந்தமும் ஆவார்கள். கடைசி நாளில் "இளைஞன்" என்ற சமுதாய நாடகம் இளை ஞர்களால் நடிக்கப் பெற்றது. திருக்கோணமலை திருவள்ளு வர் கழகம் இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டது. இதில் 80 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். திருக்குறள் வகுப்பும், பண்டிதர் வகுப்பும் நடத்தி வருகிறார்கள். இந்த முயற்சி பாராட்டத்தக்கவை. இவர்கள் நடத்திய முதல் மா நாடு இந்த அளவில் நடைபெற்றது போற்றத் தகுந்தது. மா நாட்டிலே ஏராளமான பெண் மக்கள் கலந்து கொண்டனர். திருக்கோணமலை மாநாட்டைச் சிறப்பாக நடத்தித் தந்த சிறப்பு இந்துக் கல்லூரி ஆசிரியரும், சர்வோதய இயக்கத்தில் ஈடுபாடுடையவருமான "மாஸ்டர்" பெ. பொ. சிவசேகரன் அவர்களைச் சேரும்.

1953 மே 28,29, 30 ஆகிய தினங்களில் நடைபெற்ற திருக் குறள் மகாநாட்டில் கலந்து உரையாற்றிய திரு. மோ. லெ. இலக்குமனச் செட்டியார், கல்கியில் தாம் எழுதிய கட்டுரை யில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையிலேயே திருவள்ளுவருக்கென்று ஒரு கழகம் அமைத்தது திருக்கோணமலையில் தான். அந்தக் கழகத்தி னூடாகதிருக்கோணமலை கலை இலக்கியவளர்ச்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுத்துச் செயலாற்றியது மட்டுமன்றி இந்திய அறிஞர்களே மெச்சும்படி பிரமாண்டமான விழா எடுத்த பெருமை அன்றைய ஸ்ரீ இராமகிருஷ்ண சங்க இந்துக் கல்லூரி மாணவர்களையே சாரும்.

இந்த திருவள்ளுவர் கழகத்தினூடாக பல்வேறு பட்ட பணிகளை முன்னெடுத்து செயலாற்றி இன்றைய இளைஞர் களுக்கும் ஒரு வழிகாட்டியாக இருந்தார்கள். நாடக வளர்ச் சியில் கழகத்தின் பங்களிப்பு நிறைய உண்டு.

இத்தனை சக்திவாய்ந்த அமைப்பை உருவாக்கி வழி நடத்தி - செயலாற்றி வந்த பெருமைக்குரியவர்தான். நம் மனதில் என்றும் - நீங்காமல் நிறைந்து நிற்கும் அமரர் கு. செந்திவேல் (செந்தில்). இன்று அவரும் இல்லை.............

**வீணைவேந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது வெளியீடுகள்.

- ஒற்றைப் பனை — சிறுகதைத் தொகுதி
- கோயிலும் சுனையும் — நாடகத் தொகுதி
  தா. பி. சுப்பிரமணியம்
- கயல்விழி — கவிதை நாடகம்
  திருக்கோணமலைக் கவிராயர்
- சாரணிய புதிய செயல் திட்டம்
  இ. இராஜரஞ்சன்
- 93ல் கலை இலக்கிய ஆய்வு
  — கட்டுரைத் தொகுப்பு

☆☆☆

**ஈழத்து இலக்கியச் சோலை**
**21, ஒளவையார் வீதி,**
**திருக்கோணமலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இராவண தரிசனம்

**வீணைவேந்தன்**


வெளியீடு

**ஈழத்து இலக்கியச் சோலை**
21, ஔவையார் வீதி,
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீடு


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | **"இராவண தரிசனம்"**<br>(இலக்கிய நாடகம்) |
| ஆக்கியோன் | : | **வீணைவேந்தன்** |
| முதற்பதிப்பு | : | **மாசி. 1997** |
| இரண்டாம் பதிப்பு | : | **கார்த்திகை 1997** |
| பக்கம் | : | **I - XX 31** |
| பிரதிகள் | : | **1000** |
| உரிமை | : | **திருமதி. சித்தி அமரசிங்கம்** |
| வெளியிடுவோர் | : | **ஈழத்து இலக்கியச் சோலை**<br>21, ஔவையார் வீதி,<br>திருக்கோணமலை. |
| அச்சகம் | : | **ஸ்ரீ கணேச அச்சகம்**<br>28B, புதிய சோனகத் தெரு,<br>திருக்கோணமலை.<br>தொலைபேசி : 026-22617 |
| நிழற்படங்கள் | : | **கெஜ. தர்மகுலராசா**<br>**T. பாலச்சந்திரன்** |
| அட்டை வடிவம் | : | **அமர்** |
| விலை | : | **ரூபா 65/=** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *வீணை வேந்தன்*



## இயற்பெயர் (சித்தி) அமரசிங்கம்

தம்பியையா தம்பிமுத்து முத்தம்மா தம்பதியினரின் மூத்த புதல்வனாக 1937 தை 05 இல் திருககோணமலையில் பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை மயிலிட்டி மெ.மி.வித்தியாலயத்தில் ஆரம்பிக்கும் போதே கலை உலகிலும் புகச் சந்தர்ப்பம் பெற்றிருந்த[illegible]யினும் நாடகத் துறைக்குள் முற்றும் மு[illegible] களம் அமைத்துக் கொடுத்தது திருமலை ஸ்ரீ இ.கி.மி.இந்துக் கல்லூரியாகும்.

மற்றுமொரு கலைஞரும் அமரருமான திரு. அ.சச்சிதானந்தம் என்பவரோடு இணைந்து "அமரன் ஆனந்தன்" என்ற அமைப்பின் கீழ் தமிழில் 'ROCK-N-ROLL' என்னும் இசையோடு கூடிய நடன நிகழ்வை உள்ளூரிலும் மட்டுநகர், கேகாலை போன்ற இடங்களிலும் மேடையேற்றிய பெருமை இவரைச் சார்ந்தது.

1954 இல் "யாழ்" என்ற சிறுவர் கையெழுத்துப்பத்திரிகையை ஆரம்பித்து நடாத்தியபோது, தற்போதய பிரபல எழுத்தாளர் பலரின் (பிரேமின், எஸ்.சிவசேகரம், அமரர் புலவர் சத்திய மூர்த்தி போன்றோரைக் குறிப்பிடலாம்) ஆக்கங்களுக்கு களம் அமைத்துக் கொடுத்தவர்.

1958 இல் கலைவாணி நாடக மன்றத்தை எங்களோடு ஸ்தாபிக்கக் காரணமாக இருந்ததோடு இன்று வரை அதன் வளர்ச்சிக்குத் துணையாக இருப்பவர். தனது தனித்துவ வெளிப்பாடுகளுக்காக 'அமரன் ஸ்கிறீன்' என்ற அமைப்பை உருவாக்கி பல கருத்துச் செறிவு நிறைந்த நாடகங்களைத் தந்தவர்.

இலங்கைத் திரைப்படங்களில் ஒன்றான 'தென்றலும் புயலும்' இவரது 'வினோதன்' பாத்திரத்திற்காகவே பாராட்டுக்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பில் சிரிப்பு நாடக மன்றம் கண்டசவா இரவுகள் என்பவற்றின் மூலம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டவர்.

வில்லில் கதை சொல்லுவதில் மன்னன், சிவயோகச் செவ்வன் த.சாம்பசிவம் வில் இசைக்குழுவோடு இணைந்து பல பாகங்களில் வில்லில் கதை சொன்னவர் சொல்பவர்.

92, தபாற்கந்தோர் வீதி,
திருக்கோணமலை.
22. 11. 96

தாபி - சுப்பிரமணியம்,
நாவல், சிறுகதை, நாடக, ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org